Annual Subscription Rs. 80/-
Price Rs. 7/-

# திருமறை ஆசான்

## புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 22 இதழ் - 3 மார்ச் 2009



**கிறிஸ்துவின் சபை**
காங்கயம் - 638 701
தமிழ்நாடு, இந்தியா.
✆ 04257 - 230030,230603 ;98427 - 30382, 99655 - 30385
E-mail : kangayamcofc @eth.net

# உங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் வேண்டும்

கடந்த 15,16 ஆண்டுகளாக திருமறை ஆசான் மாத இதழில் வெளிவந்த என்னுடைய ஆசிரியர் உரை களைத் தொகுத்து, 2 (அ) 3 நூல்களாக வெளியிட விரும்புகிறேன். அதற்கு முன்பாக, வாசகர்களாகிய உங்களுக்கு இது எந்தளவு பயனுள்ளதாக இருக்குமென்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

இவ்விலக்கியப்பணிக்கு, பரலோக தேவனுடைய தயவோடு, உங்களது ஆலோசனைகளும், ஊக்கமும், பொருளாதார ஒத்துழைப்பும் அத்தியாவசியம்.

ஆகையால், தனிப்பட்ட முறையிலும், குழுவாகவும், சபையாகவும் நீங்கள் எப்படிப் பங்களிக்க முடியுமென்பதைத் தெரிவித்து, இப்பணியைத் தாங்குமாறு ஜெபத்தோடு வேண்டுகிறேன்.

உங்கள் கருத்துக்களை எதிர்பார்க்கும்,

ஆசிரியர்.

## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. சுவிசேஷத்திற்கு கிழ்ப்படிவது எப்படி? ........ 11
3. பெண்கள் பகுதி ........ 15
4. வாலிபர் பகுதி ........ 19
5. சிறுவர் பகுதி ........ 22
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 24
7. நீங்களும் இவர்களில் ஒருவரா? ........ 28
8. கிறிஸ்துவைப் பின்பற்ற நாம் எடுக்க வேண்டிய நம்முடைய சிலுவை ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 22 MARCH - 2009 Issue - 3


ஆசிரியர் உரை

## சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து

சீர்கேடு என்ற வார்த்தைக்கான பொருள் என்ன என்பதை பல் வேறு நிலைகளில் பட்டவர்த்தனமாக அறிந்து கொள்ளும் ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். இந்தச் சீர்கேட்டை, ஒரு குறிப்பிட்ட பருவத்துக்கோ, காலகட்டத்திற்கோ அல்லது ஓர் இடத்திற் கோ, இன்னும் ஓர் இனத்திற்கோ உரியது என்று நாம் இனம் கண்டு ஒதுக்கிவிட முடியாது. சொல்லப்போனால், இது எங்கும் வியாபித்தி ருக்கும் ஓர் அசுர சக்தி. இதன் கோரப்பிடியில் சிக்காதது எதுவுமே இல்லை என்று சொல்லத்தக்க அளவில் இது தன் எல்லையைப் பரப்பி குடும்பம், சமுதாயம், கலாச்சாரம், அமைப்பு, அரசியல், ஆட்சி, அதி காரம் என்று நாமறிந்த அனைத்து இடங்களிலும், ஏனைய நிலைகளி லும் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது. என்னுடைய இக்கருத்துக்கு முரண்படுவோர் மிகக் குறைந்த அளவிலேயே இருப்பர் என்று எண்ணுகிறேன்.

இப்படி நீண்ட நெடுங்காலமாகப் பழக்கத்திலும், வழக்கத்திலும், பண்பாட்டிலும் இரண்டறக் கலந்து காணப்பட்ட இப்பட்டியலிலிருப்ப வைகளைப் பல்வகையான சீர்கேடுகள் காப்பாற்ற முடியாத அளவு பாதித்திருப்பது கடும் வேதனையைத் தந்தாலும், ஒரு வகையில் உட்கார்ந்து சிந்தித்துப் பார்க்கும்போது, சீர்கேடு என்ற இவ்வார்த்தை யால் நாசமாக்கப்பட்டிருப்பவைகளின் பாதிப்பு ஒரு மனிதனின் மரணத் தோடோ அல்லது வேத வசனங்கள் சொல்லுகிறபடி (2பேதுரு 3:10), இப்பூமியின் அழிவின் போதோ முடிந்து போகக் கூடியதாகவே உள்ளது. இது, அப்பாடா என்று கொஞ்சம் ஆறுதலைத் தந்தாலும், இச்சீர்

கேட்டின் சின்னத்தனம் ஆன்மீகத்தையும் ஆட்டிப்படைத்து, குறிப்பாக கிறிஸ்த வத்தையும கீழே போட்டு மிதிக்காமலிருக்கவில்லை என்பதை நினைக்கும் போது நெஞ்சு கனக்கிறது என்று சொல்வதை விட வெடித்து சிதறுவதாகவே உள்ளது.

ஆம், நம்முடைய நாட்களில், கிறிஸ்தவம் சீர்கேட்டின் விளிம்பிற்கே சென்றுவிட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. எப்படியெனில், மெய்க் கிறிஸ்தவத்தின் அச்சு அசைக்கப்பட்டும், அதன் ஆணிவேரில் வெண்ணீர் ஊற்றப்பட்டும் வருகிறது. தேவ மைந்தனாகிய இயேசுவானவரின் அருள்வாக்குகள் அடங்கிய புதிய ஏற்பாடு வெளிப்படுத்தியிருக்கும் உன்னத மார்க்கமான மெய்க் கிறிஸ்தவத்தின் மேனி மங்கி, மெருகு குலைந்து, ஆன்மீக அலங் கோலத்தோடு காட்சி தருகிறது. கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசம் காற்றிலே பறந்து கொண் டிருக்கிறது. கிறிஸ்துவின் வசனம் போதிக்கும் புதிய ஏற்பாட்டு ஆரா தனை அசிங்கப்படுத்தப்பட்டு வருகிறது. கிறிஸ்து கற்பித்த பக்தி மார்க்கம் வேஷமாக மாறி வருகிறது. நான் சொல்லும் இக்கருத்து, ஒருவேளை மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், கொஞ்சம் மிகைப் படுத்தப்படுவது போல் தெரிந்தாலும், கிறிஸ்தவ அறத்தில் முழு ஈடுபாடு கொண்டுள்ள சமயச் சான்றோர்களுக்கு இது உண்மைதான் என்று உள்ளுரவாகிலும் புரியும்.

என்ன நேர்ந்தது இன்றைய நாட்களின் கிறிஸ்தவத்திற்கு? இச்சீர்கேடுகளுக்கான அடிப்படைதான் என்ன? எதைச் சாதிக்கக் கிறிஸ் தவம் இப்படித் தறிகெட்டு ஓடிக்கொண்டிருக்கிறது? இக்கேள்விகளுக் கான விடை தெரிய பெரிய ஆராய்ச்சி ஒன்றும் தேவையில்லை. ஏனெனில், நம்முடைய நாட்களில் வாழும் கிறிஸ்தவ சமுதாயத்திற்கு ஆன்மீக காரியங்களுக்கும், பக்தி வாழ்வுக்கும் எது தேவை, எது தேவையில் லை அல்லது எது முக்கியம் - எது முக்கியமில்லை அல்லது எது அவசியம் எது அவசியமில்லை என்ற பால பாடமே இன்னும் பிடிபட வில்லை. எப்படியெனில், இயேசு ஆண்டவர், பரலோக வாசத்தைத் துறந்து எதற்காகப் பூமிக்கு வந்து $33^1/_2$ ஆண்டுகள் வாழ்ந்து, $3^1/_2$ ஆண்டுகள் ஊழியம் செய்தார் என்பதே விளங்கிக் கொள்ளப் படாத ஒன்றாக இருக்கிறது. ஆம், இயேசு இரட்சகர் மானிடத்தின் மண் ணுலக வாழ்வுக்காக வந்தாரா அல்லது விண்ணுலக வாழ்வுக்காக வந்தாரா? இம்மைக்குரிய ஆசீர்வாதங்களை வாரி வழங்கிட வந்தாரா? அல்லது மறுமைக்குரிய ஆசீர்வாதங்களை வாக்களிக்க வந்தாரா? என்ற அடிப்ப டைக் கேள்விகளுக்கே சரியான விடை கண்டுபிடிக்கப்படாமல் உள்ளது. இயேசு ஆண்டவர் வந்து சுமார் 2000 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும், இது தான் கிறிஸ்தவத்தின் யதார்த்த நிலையாக உள்ளது!.

கிறிஸ்துவை நாங்கள் அறிவிக்கிறோம் அல்லது கிறிஸ்தவத்தை நாங்கள் பரப்புகிறோம் என்று சொல்லிக்கொண்டு, இளம் பெண் பிள்ளை களையும், வாலிபப் பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது,

இதுவா இயேசு கிறிஸ்து போதித்த கிறிஸ்தவம் என்று மூக்கின் மேல் விரலை வைக்கவல்லவா செய்கிறது! கேளிக்கை காட்சிகளுக்கும், சில கிறிஸ்தவ நிகழ்ச்சிகளுக்கும் ஏதாவது வேறுபாடு உங்களுக்குத் தெரிகிறதா? சரி, அதுதான் போகிறது என்று அந்தப் பக்கம் திரும்பி பாஸ்டர்கள் என்றும், வல்லமைப் பிரசங்கிகள் என்றும், வரம் பெற்றவ கள் என்றும் தங்களுக்குத் தாங்களே மகுடம் சூட்டிக் கொண்டிருப்ப வர்களின் பிரசங்கங்களையும், நற்செய்திக் கூட்டங்களையும் கவனித் தால், ஏதோ இயேசு இரட்சகர், மானிடத்தின் சரீரத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், சரீரப் பிணிகளை நீக்கவும், ஆசீர்வாத மழையினால் மக்களை நனைக்கவும் தான் வந்தார் என்பது போலவே சித்தரிக்கின்ற னர். ஏன் இவைகளையெல்லாம் சர்வ வல்ல தேவனும், அவர் தம் குமாரனாகிய இயேசு ஆண்டவரும் வானத்திலிருந்தபடியே நமக்கு அருள முடியாதா? அங்கிருந்து அனுப்புவதில் அவர்களுக்கு ஏதாவது சிரமம் இருக்கிறதா? கொஞ்ச காலம் மாத்திரமே இருந்து, பிறகு இல்லாமற் போகும் சரீர நன்மைகளுக்காக, இயேசுவானவர் பரலோக மகிமையைத் துறந்து பூமிக்கு வரவேண்டுமா? சொல்லுங்கள். உங்கள் பதில், இல்லையென்பதனால், பின்னே ஏன் இந்த நிலை?

இன்றைய கிறிஸ்தவ மத போதகர்களையும், அவர்களின் பிரசங்க பாணிகளையும், அவர்களின் ஊழியத்தின் தன்மைகளையும் கவனித்துப் பார்க்கும் போது அப்போஸ்தலன் பவுலடியார் ஒரு சுவி சேஷ பிரசங்கி என்று அழைக்கப்படுவதற்குத் தகுதியானவர் தானா என்ற சந்தேகம் வருகிறது. ஆதிக்கிறிஸ்தவர்களை அழித்தொழிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு அதற்காக தமஸ்கு பட்ட ணத்துக்குத் தாவிச் சென்று கொண்டிருந்த சவுலை இயேசுவானவர் சந்தித்து அழைத்தது அவசியம் தானா என்று எண்ணவும் தோன்று கிறது. மெத்தப் படித்த பவுல் பேசாமல் தன்னுடைய வழக்குறைஞர் தொழிலையே தொடர்ந்திருக்கலாமே, ஏன் இப்படி வீணாய்ப் போனார் என்று ஆதங்கப்படக் கூடச் சொல்லுகிறது. ஏன் இவர் தனக்கிருந்த சரீரக் குறைகளோடும், பெலவீனத்தோடும், நாடு, கடல், நகரம் என்று சுற்றித் திரிந்தார் என்ற கேள்வியும் எழும்புகிறது. இப்பொழுது உங்கள் முகம் சுளிவதும், நீங்கள் கொஞ்சம் நெளிவதும் எனக்குத் தெரிகிறது. பின்னே, என்ன? ஆவியானவரின் வழி நடத்துதலைக் கொண்டு நிறைய பிரசங்கங்களைச் செய்திருக்கும் பவுல், பூமிக்குரிய ஆசீர்வாதங்களை மையப்படுத்தி ஏதாவது ஓர் இடத்திலாகிலும் பிரசங்கித்திருக்கிறாரா? அல்லது வேறு அப்போஸ்தலர்களோ அல்லது ஆவியானவரால் பயன்படுத்தப்பட்ட தேவ மனிதர்களோ பேசியிருக்கிறார்களா? இந்த உத்தம புருஷர்களுக்குத் தெரியாதது தான், நம்ம ஆட்களுக்குத் தெரிந்து விட்டதா? பாவம், ஆதி அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும்; பிழைக்கத் தெரியாதவர்கள்! அப்படித்தானே. இல்லை, இல்லை, இல்லை.

கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாகப் பிரபலமாகவுள்ள பவுலடியார், ஆவியானவரால் வழிநடத்திச் செல்லப்பட்ட அனைத்து இடங்களிலும், தான் சிலுவைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு தானே பிரசங்கம் செய்துள்ளார். தான் எவ்விதத்திலும் வெளியில் தெரிந்து விடக்கூடாது, சிலுவை தான் தெரிய வேண்டும். நானல்ல, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து தான் காணப்பட வேண்டுமென்பது தானே அதன் நோக்கம். சிலுவை, சிலுவை என்று உயிரோடெழுந்த கிறிஸ்துவைத்தானே சென்ற இடமெங்கும் தூக்கிப் பிடித்துக் காண்பித்துள்ளார். *நாங்களோ சிலுவையிலறை யப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்......* (1கொரி 1:23). இயேசு கிறிஸ்துவை, *சிலுவையிலறையப்பட்ட அவரையேயன்றி*, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந் தேன்.... (1கொரி 2:2). நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம் (2கொரி 4:5) என்று.

அப்படியானால், இதிலிருந்து நமக்கு என்ன விளங்குகிறது? வேத வசனங்களின்படி, நமது பக்தி வாழ்க்கைக்கும், பரலோக பாக்கியத்துக்கும் எது முக்கியம்? ஆனால், இன்றைய கிறிஸ்தவப் பிரசங்கிகளால் எது முக்கியமென்று காட்டப்படுகிறது? *கிறிஸ்துவின் சிலுவை* தான் எல்லாப் பிரசங்கங்களின் மையமாக இருக்கிறதா அல்லது மதப் பித்தர்களால் ஏற்படுத்தப்பட்ட, வேத வசனங்களால் ஏற்றுக்கொள்ளப்படாத லெந்து நாட்களில் மட்டும் கிறிஸ்துவின் சிலுவை நினைக்கப்பட்டு மறக்கப்படும் ஒன்றாக உள்ளதா? இதுதான் கிறிஸ்தவத்தின் போக்கு என்றால், இன்றைய கிறிஸ்தவம் தேறுவது மிகவும் சிரமம். பெத்தலையில் பிறந்த இயேசு பற்றியோ, நாசரேத்தில் வளர்ந்த ஆண்டவர் பற்றியோ, கலிலேயாக் கடலைச் சுற்றித்திரிந்த கர்த்தர் பற்றியோ பிரசங்கிப்பது தவறு என்று நான் கண்டிப்பாகச் சொல்லவில்லை. நம்முடைய வாழ்வுக்குத் தேவையான அருமையான பல பாடங்கள் அவைகளில் அடங்கியிருக்கிறதென்பது உண்மையிலும் உண்மை. இதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனாலும், ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கு எதை முக்கியம் என்று வெளிப்படுத்தியிருக்கிறார்? கலிலேயாக் கடலையா? அல்லது கல்வாரி மலையையா? நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்த இயேசுவையா? அல்லது தேவ வல்லமையினால் உயிரோடே எழுந்த கிறிஸ்துவையா? எதை? எதை?.

தேவனைக் காட்டிலும், தேவனுடைய ஆவியானவரைக் காட்டிலும் நாம் எல்லாம் தெரிந்தவர்களா? நம்முடைய அறிவின்படியாகக் காரியங்களை அணுகுவது நல்லதா அல்லது தேவன், அவருடைய வசனங்களில் வெளிப்படுத்தியிருக்கும் மாதிரியைப் பின்பற்றி காரியமாற்றுவது சிறந்ததா? தேவனுக்குக் கற்றுக் கொடுப்பது நல்லதா? அல்லது தேவ வழிகாட்டுதலுக்குக் கட்டுப்பட்டு அடங்குவது நல்லதா? நம்முடைய நாட்களின் பிரசங்கிகளுக்கு விளங்காத ஓர்

உண்மை பவுலடியாருக்கு நன்றாகத் தெரிந்திருந்ததென்பதை இவ்வசனத்தின் மூலமாகிலும் தெரிந்து கொள்ளுங்கள். *சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்த போது, தேவனைப் பற்றிய சாட்சியைத் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசு கிறிஸ்துவை, சிலுவையிலறையப்பட்ட அவரையேயன்றி, வேறென்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருக்கிறேன்* (1கொரி 2:1,2). பவுலுடைய நாட்களில் சிறந்த வசனிப்பிற்கும், ஞானத்திற்கும் ஒரு பெரிய மரியாதை இருந்தது. பவுலடியாருக்கு இந்த இரண்டுக்குமான தகுதியும், தரமும் இருந்தது. ஆனாலும், நான் அவைகளைக் கொண்டு உங்களிடம் பேச வரவில்லை. அது முக்கியமுமில்லை. மனுக்குலத்தின் தேவை கிறிஸ்துவின் சிலுவை தான் என்று சென்ற இடமெல்லாம் முழங்கியுள்ளரே. இயேசு பற்றி வேறு எதுவும் அவருக்குப் பேசத் தெரியாததால் பவுலடியார் அப்படிச் செய்யவில்லை.

சரி, கிறிஸ்துவின் சிலுவை இந்தளவு முக்கியமானதாக இருப்பதால், இச்சிலுவை நமக்குத் தரும் பாடங்கள் என்னவென்று சிலவற்றை இங்கே கவனிப்போம்.

**I சிலுவைக் கிறிஸ்து - தேவ ஞானம்**

சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவிடமிருந்து நமக்குக் கிடைக்கும் அநேக பாடங்களில் முதல் பாடம், கிறிஸ்துவின் சிலுவை தேவ ஞானத்தைப் பறைசாற்றுகிறதென்பது.

தேவ ஞானம் பற்றிய முழு விவரங்களையும் வெளிக் கொணருவது எந்த ஒரு மனிதனாலும் இயலாத காரியம். வேத வாக்கியங்கள், தேவ ஞானத்தை வெகு நேர்த்தியாக விவரிக்கிறது. "....*ஞானமும், வல்லமையும் அவருக்கே உரியது..... அவர் ..... ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர்*" (தானி 2:20,21) என்றும், தேவன், "*பூரண ஞானமுள்ளவர்*" (யோபு 37:16) எனவும், "*அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது*" (ஏசா 40:28) என்றும் கூறுகிறது. இன்னும் பல வசனப்பகுதிகள் இதே கருத்தில் உண்டு. இப்படி, நம்முடைய அறிவுக்கெட்டாத ஞானம் கொண்ட தேவாதி தேவனுடைய காரியங்களில், மனித ஞானம் ஒரு போதும் ஒரு பொருட்டாக எண்ணப்பட்டு விடக்கூடாது என்பது நிறைந்த படிப்பும், வாதத்திறனும் கொண்ட பவுலடியாருக்கு மிகவும் தெளிவாகத் தெரிந்திருந்தது.

ஆகவே தான், கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம் இரண்டாம் அதிகாரத்தில், ஆவியின் ஏவுதலால் இவ்விதம் விளக்கியுள்ளார். "உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது, இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டது

மாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம், அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைய மாட்டார்களே (1கொரி 2:4-8) என்று.

பாவச் சேற்றில் விழுந்து சீரழிந்து கொண்டிருந்த மனிதனுக்கான தேவ திட்டத்தின் மையப்பங்குதான் இயேசுவின் சிலுவை. கல்வாரிச் சிலுவையில், தேவஞானம் பரிபூரணமாக வெளிப்பட்டிருக்கிறது. சிலுவையும், சிலுவையின் தியாகமும், சிலுவை இரத்தமும் இல்லையென்றால் மனிதனின் கதி அதோகதி தான். இயேசுவின் சிலுவையில் கிடைத்த நன்மைகள் பற்றி நமது பவுலடியார் அதே கொரிந்தியருக்கு எழுதும் போது, "அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார்" என்று கூறுகிறார் (1கொரி 1:31). இன்னும், ஆகிலும் யூதரானாலும், கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவ *ஞானமுமாயிருக்கிறார்* என்கிறார் (1கொரி 1:24).

மேலும், அப்போஸ்தலன் பவுல், எபேசு பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, தேவ ஞானம் சபையின் மூலம் தெரிய வந்திருக்கிறது என்கிறார், "உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய *அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக.....*" என்று (எபே 3:10) அதாவது, தேவஞானம் சிலுவையில் மாத்திரமல்ல *சபையின் மூலமும்* தெரிய வந்திருக்கிறது என்கிறார்.

அப்படியானால், தேவ ஞானத்தின்படியான சிலுவையின் பயனும், சபையின் நன்மையும் நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் உணர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதா?. தேவ ஞானத்திற்கும், சபைக்கும் தொடர்பிருப்பது உண்மையானால், அந்த சபைக்கும் நம்முடைய பக்தி வாழ்க்கைக்கும் தொடர்பு இருக்க வேண்டியது அவசியம். இங்கே ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தேவ ஞானம் *சபையின்* மூலமாகத்தான் தெரியவந்திருக்கிறதேயொழிய, *சபைகளின் மூலமாக அல்ல.* தேவஞானத்திற்கும், சபைக்கும் அதாவது, தேவ ஞானத்திற்கும், ஒரு சபைக்கும் தான் தொடர்பிருக்கிறது. இன்றைக்கு உலகிலே காணப்படும் நூற்றுக்கணக்கான சபைகளுக்கும், தேவ ஞானத்திற்கும் எந்த ஒரு சம்பந்தம் இல்லை. அவைகள், மனித ஞானத்தின்படியானவைகள்.

தேவனுடைய அநந்த ஞானத்தின்படியான அந்த ஒரு சபை இயேசுவாலே வாக்களிக்கப்பட்டுள்ளது (மத் 16:18). அவராலே பிரசங்கிக்கப்பட்டுள்ளது (மத் 4:17). அது இயேசுவின் இரத்தத்தாலே வாங்கப்பட்டுள்ளது (அப். 20:28). கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கியுள்ளது (1கொரி 15:24). ஆகையால், தேவ ஞானத்தின்படியான இந்த ஒரு சபையில் நீங்கள் அங்கமாயிருந்து தேவனை ஆராதிக்கிறவர்களாக இருந்தால் தான் பரலோகம் செல்ல முடியும்.

### II சிலுவைக் கிறிஸ்து - தேவ வல்லமை

சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவிடமிருந்து நமக்குக் கிடைக்கும் அநேக பாடங்களில், இரண்டாவது பாடம், கிறிஸ்துவின் சிலுவை, தேவ வல்லமையை நமக்கு அறிவிக்கிறது என்பது.

அப்போஸ்தலன் பவுல், 1 கொரிந்தியர் 1:18ல் சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக் கிறது; இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது *"தேவ பெலனாயிருக் கிறது"* என்கிறார். தேவபெலன் என்பதும், தேவ வல்லமை என்பது ஒன்று தான். இந்தத் தேவ வல்லமை குறித்து ரோமாபுரியாருக்கு எழுதும் போது, "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட் கப்படேன். முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவ னெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெல *னாயிருக்கிறது* என்கிறார் பவுல் (ரோம 1:16). ஆக, சிலுவையும் தேவ வல்லமையை வெளிப்படுத்துகிறது. *கிறிஸ்துவின் சுவிசேஷ மும்* தேவ வல்லமை யை வெளிப்படுத்துகிறது.

மேலும், எபேசியர் 2:1-22 வசனப்பகுதியில் தேவ வல்லமை இரட்சிப்புக்கு எப்படிப் பயனுள்ளதாயிருக்கிறதென்று பவுலடியார் தொகுத்துக் கொடுக்கிறார்.

முதலாவது, மனிதனுடைய பாவமான நிலையும், அவனுக்கான தேவையும் சொல்லப்பட்டிருக்கிறது (1-3). இரண்டாவது, மனிதனின் இரட்சிப்புக்கான தேவனுடைய இரக்கம், கிருபை, அன்பு ஆகியவை விவரிக்கப்பட்டிருக்கிறது (4-10). மூன்றாவது, கிறிஸ்துவின் மரணத் தினாலே, மனிதன் தேவனோடு ஒப்புரவாக முடிந்ததென்றும், இது சிலுவையினாலே, ஒரே சரீரமாகிய சபைக்குள்ளாக சாத்தியமாகி யிருக்கிறதென்றும் காட்டுகிறது. (11-16) இந்த சரீரமாகிய சபைதான் (எபே 1:22,23). சிலுவையில் சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தி னாலே வாங்கப்பட்டிருக்கிறது (அப். 20:28).

ஆக, ஒருவன் சிலுவையைப் பற்றிப் பிரசங்கிக்கும் போது, அவன் சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தம் குறித்துப் பிரசங்கிக்க வேண்டும். அப்படி சிலுவை இரத்தம் குறித்துப் பிரசங்கிக்கும் ஒருவன், அந்த இரத்தத்தால் வாங்கப்பட்ட *சபை* (அப். 20:28) குறித்து கண்டிப்பாக பேசியாக வேண்டும். எனக்குக் கிறிஸ்து வேண்டும், கிறிஸ்துவின் இரத்தம் வேண்டு மென்றும் சொல்லிக்கொண்டு, கிறிஸ்து வினால் வரும் இரட்சிப்பு வேண்டாம் என்றோ அல்லது கிறிஸ்து இரத்தம் சிந்தி வாங்கிய சபை வேண்டாம் என்றோ சொல்ல முடியாது. ஆனால், மத உலகில் இப்படிப்பட்ட சிந்தையுள்ளவர்களை நாம் ஏராளமாகக் காண முடியும்.

இயேசுவானவர், மானிடத்தை இரட்சிக்கும்படியாகவே பூமிக்கு வந்தார் (லூக் 19:10). என்பதை தேவனைப் பிரியப்படுத்த விரும்பும் ஒருவன் ஒருபோதும் மறக்கக்கூடாது. தான் விசுவாசத்தில் பெற்றெ டுத்த உத்தமக் குமாரனாகிய தீமோத்தேயுவுக்குப் பவுலடியார் எழுதும் போது, *பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்தி ரமுமானது. அவர்களில் பிரதான பாவி நான்* (1தீமோ 3:15). ஏன் இந்தப் பவுலடியாருக்கு இயேசு பூமியில் அற்புதம் செய்ததெல்லாம் தெரியாதா? இயேசு நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்ததை அவர் அறிந்திருக்கவில்லையா? ஏன், அவைகளைப் பற்றியெல்லாம் குறிப்பிடாமல், "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து உலகத்தில் வந்தார்

என்கிற வார்த்தை உண்மை...." என்கிறார். முதல் நூற்றாண்டிலேயே, பெரும்பாலான ஜனங்கள் இதை நம்புவதற்குச் சிரமப்பட்டபடியால் தான், ஆவியானவர் பவுலுக்கு இப்படி ஆணித்தரமாக வெளிப்படுத்தி யுள்ளார் என்று தெரிகிறது.

அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி, இயேசுவின் முதல் வருகை யின் நோக்கம் உலகத்தாலும், இயேசுவை நாங்கள் ஏற்று வாழ் கிறோம் என்கிற கிறிஸ்தவத்தாலும் முழுமையாகப் புரிந்து கொள்ளப் படவில்லை. தேவவல்லமை, இயேசுவானவர் இப்பூமியில் இருந்த போது, சரீர நன்மைகளுக்காக வெளிப்பட்டதைக் காட்டிலும், சிலுவை யில் தொங்கினபோது, நித்திய நன்மைகளுக்காக அளவில்லாமல் வெளிப்பட்டிருக்கிறது. 70-80 ஆண்டுகள் முடிந்து போகும் சரீர நன்மைகளைக் காட்டிலும், என்றென்றுமான நித்திய ஆசீர்வாதங்கள் தான் பெரிது. இந்த உண்மையை நாம் ஒவ்வொருவரும் புரிந்து தேவ வல்லமையின் மூலம் கிடைக்கும் ஆத்தும இரட்சிப்பை விசுவாசித்து (மாற் 16:16), மனந்திரும்பி (அப் 2:35) இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு (ரோம 10:10) பாவமன்னிப்புக்காக தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் (அப் 22:16) பெறுவதன் மூலம் பெற்றுக்கொள்வது அவசியம். நாம் கிறிஸ்துவின் உபதேசப்படி இவை களைச் செய்வோமானால் தேவஞானத்தின்படியான சபையிலே கர்த்த ரால் சேர்க்கப்படுவோம்.

**III சிலுவைக் கிறிஸ்து - இரத்தத்தின் வல்லமை :**

சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், கிறிஸ்துவின் சிலுவை அவருடைய இரத்தத்தின் வல்லமையை வெளிப்படுத்துகிறதென்பது.

உலகத்திலே வேறு எதற்கும் இல்லாத வல்லமை இயேசு கிறிஸ் துவின் இரத்தத்திற்கு உண்டு. முதல் நூற்றாண்டின் இறுதியில், ஆவியா னவர் யோவான் அப்போஸ்தலனுக்கு இப்பேருண்மையை இவ்வித மாய் வெளிப்படுத்தியுள்ளார்.... *அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்தி கரிக்கும்* (யோவா 1:7) இயேசுவின் இரத்தம் தவிர வேறெதற்கும் இந்தச் சக்தி இல்லை. ஏனெனில், இயேசுவின் இரத்தம் குற்றமில்லா தது (மத் 27:4). இயேசுவின் இரத்தம் மாசற்றது, விலையேறப்பெற்றது (1பேது 1:19). இயேசுவின் இரத்தம் போதுமானது. (எபி 9:13, 14) இயேசுவின் இரத்தம் இறுதியானது. (எபி 9:24-28). அடுத்து இயேசு வின் இரத்தம் வெற்றி கொள்ளக்கூடியது (வெளி 12:11). இப்படிப் பட்ட மகத்தான இரத்தம் தான் கல்வாரிச் சிலவையில் நம் ஒவ்வொரு வருக்காகவும் சிந்தப்பட்டது.

சர்வவல்ல தேவனுடைய மீட்பின் திட்டத்தின்படியாக, கொல் கொதா மலையில் கொடுமையான முறையில் சிந்தப்பட்ட இயேசு வின் இரத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கிறது. (எபே 1:7) இந்த உண்மையை, இயேசு தான் சிலுவைக்குப் போவதற்கு முன்பாக சீடர்களோடு கடைசி பந்தியை மேல் வீட்டில் கடைபிடித்த போதே சொல்லிவிட்டார். இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேக ருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்த மாயிருக்கிறது (மத் 26:28) என்று. எபிரெய ஆசிரியர், இரத்தத்தின்

மகிமை குறித்து,.... இரத்தஞ் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது. (எபி 9:22) என்கிறார்.

இயேசுவின் இந்த இரத்தம், தேவனுக்கும், மனிதனுக்கும், பாவத்தின் விளைவாக ஏற்பட்ட பிரிவினையையும் (ஏசா 59:1,2), பகையையும் (எபே 2:14) எடுத்துப் போட்டு சமாதானத்தைக் கொண்டு வருகிறது. இது குறித்து பவுலடியார், கொலோசே பட்டத்தாருக்கு இவ்விதம் எழுதுகிறார். அவர் *சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி,* பூலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்கு பிரியமாயிற்று என்று. (கொலோ 1:20). நம்மைக் கிறிஸ்து இயேசுவுக் குள்ளாக்கும் ஞானஸ்நானம் பெறும்போது, நம்முடைய கடந்த காலப் பாவங்கள் எப்படிப்பட்டதாக இருந்தாலும், அவைகளிலிருந்து நம்மை சுத்திகரிக்கிறது. *நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலி யாகத் தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு உங்கள் மனசாட்சியை செத்த கிரியைகளைச் சுத்திகரிப்பது* எவ்வளவு *நிச்சயம்?* (எபி 9:14). அதுமாத்திரமல்ல, நாம் தொடர்ந்து கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி, நடக்கிறவர்களாக இருந்தால் நித்திய இரட்சிப்பு வரைக்கும் நம்மைச் சுத்திகரிக்கக் கூடியதாகவும் உள்ளது. (யோவா 1:7).

கிறிஸ்துவின் சிலுவை பற்றிப் பேசும் போது, தியானிக்கும் போது, நாம் கிறிஸ்து சிந்தின இரத்தத்தின் வல்லமைபற்றி இவ்வளவு காரியங்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது. ஆகையால், நாம் கிறிஸ்துவின் சிலுவையை எப்பொழுதும் மனதில் கொள்கிறவர்களாக இருக்க வேண்டும். இயேசுவானவர் இதை நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். இதற்காகத்தான் இராப்போஜன பந்தியை ஏற்படுத்தி, *என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்* (1கொரி. 11:24,25) நாம் கர்த்தருடைய சிலுவையை நினைக்க வேண்டுமென்று தான் கர்த்தருடைய பந்தியை வாரந்தோறும் கடைபிடிக்க கர்த்தர் கட்டளையிட்டுள்ளார். (அப் 20:7) கர்த்தரின் பந்தியில் நாம் கிறிஸ்துவின் சிலுவையைத் தான் நினைவு கூருகிறோமேயொழிய அவ்ருடைய பூமிக்குரிய வாழ்க்கையை அல்ல. சிலுவையின் காரியங்கள் ஒரு மனிதனுடைய நித்திய வாழ்வுக்கு அவ்வளவு முக்கியமானவைகள். வருடத்திற்கு 40 நாட்கள் பூவையும், பொட்டையும், மாமிசத்தையும் மறந்து, தாடி வளர்த்துக் கொண்டு திரிவது சிலுவை தியானமாகாது. சிலுவை வாழ்க்கையுமாகாது. தேவன் இதிலே ஒரு போதும் பிரியப்படமாட்டார்.

ஆகையால், அருமையானவர்களே, நம்முடைய பக்தி வாழ்க்கைக்கு எது முக்கியமென்று அறிந்து கிறிஸ்துவின் சிலுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து, தேவ ஞானத்தையும், தேவ வல்லமையையும் ஏற்று நித்திய வாழ்வுக்கு நம்மை ஆயத்தமாக்குவோம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் பரலோக பாக்கியத்துக்குப் பங்காளிகளாக மாறு வோம். ஆமென்!

**S. ராஜநாயகம்**

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

# பன்னிரண்டாவது வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

# திருமறை தியானம் நேயர்கள் & திருமறை ஆசான் வாசகர்கள் கருத்தரங்கம்

**இடம் :**

**YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)**

**நாள் : மே மாதம் 4, 5,6 - 2009 (திங், செவ், புதன்)**

## சிறப்பம்சங்கள்

- கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
- ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
- பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.
- கோடை வாசஸ்தலம் – சமச்சீரான தட்ப வெப்பம்.
- வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.
- குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
- பெண்களுக்கு தனி இடவசதி.
- சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

**பதிவுக் கட்டணம்**

**பெரியவர்கள் ரூ. 100 /- சிறியவர்கள ரூ. 60 /-**

**கிறிஸ்துவின் சபை**

288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

PH. : 04257 - 230603 Cell : 98427 - 30382, 99655 - 30385

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**

# சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவது எப்படி?

இப்பாடத்தில், சுவிசேஷத்திற்கு எப்படிக் கீழ்ப்படிவது என்று பார்க்கப்போகிறோம். நற்செய்தி என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அநேக ஜனங்களுக்கு இதன் பொருள் தெரியாது. பொருளே என்னவென்று தெரியாத பொழுது சுவிசேஷத்திற்கு அவர்கள் எப்படிக் கீழ்ப்படிய முடியும்? அவர்களால் முடியாது. ஆகவேதான், நாம் சுவிசேஷம் என்றால் என்னவென்றும், அதற்குக் கீழ்ப்படிவது எப்படியென்றும் அறிந்து கொள்ளப் போகிறோம்.

முதலாவது, சுவிசேஷம் என்ற வார்த்தையைக் கவனிப்போம். இவ்வார்த்தையை எல்லா நேரங்களிலும் பயன்படுத்துகிறோம். ஆனால், நாம் பயன்படுத்துகிற இவ்வார்த்தையின் பொருள் தெரியாமல், அது என்ன சொல்லுகிறது என்று விளங்காமல் பயன்படுத்துவதால் என்ன நன்மையுண்டு? சுவிசேஷம் என்ற வார்த்தை *நற்செய்தி* என்று விளக்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார், ***அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்; சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று*** (ரோமர் 10:15), சுவிசேஷம், ஏன் நற்செய்தியாகிறது? ஏனெனில், இது இயேசு கிறிஸ்துவின் *மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல்* ஆகிய இவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கொரிந்து பட்டணத்தாருக்கு பவுல் இவ்விதம் கூறுகிறார். அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்கு பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்கு பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதை கைக் கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே.

நான் அடைந்ததும் உங்களுக்கு பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால் கிறிஸ்துவானவர், வேதவாக்கியங்களின்படி, நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் (1கொரி. 15:1-4) ஆனால், இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகிய இது எப்படி நற்செய்தியாக முடியும்? கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, நாம் இரட்சிப்படையும்படியாய், உயிர்த்து தம்முடைய மரணத்தின் மூலம் நித்திய வாழ்வுக்குண்டான நம்பிக்கையை நமக்குக் கொடுத்தபடியால் இது நற்செய்தியாகிறது. ஆனால், அவருடைய மரணம் ஒரு முடிவு அல்ல. அவர் மரணத்தைவென்று கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து, தான் தேவனுடைய குமாரனென்றும், மனிதனை பாவத்திலிருந்து இரட்சிக்க முடியும் என்று நிரூபித்த

படியால், நாம் நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிப்படைய முடியும். பவுல் கூறுகையில், நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் என்றும் சொல்லியுள்ளார் (ரோமர் 5:8) மேலும், பேதுரு அப்போஸ்தலன், நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். (1பேதுரு 2:24) என்று கூறியுள்ளார்.

இன்னும் அநேக வசனங்கள் கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை விளக்கமாக பேசி இக்கருத்தை உறுதி செய்கிறது. ஆனால், அது உன்னையும், என்னையும் எப்படி இரட்சிக்கிறது? சரி, முதலாவது, நாம் அதை விசுவாசிக்க வேண்டும். நாம், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும், அவர் நமது பாவங்களுக்காக, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, கல்லறையிலிருந்து எழுந்தார் என்றும் விசுவாசிக்க வேண்டும். இதை விசுவாசிக்காத பட்சத்தில் நாம் இரட்சிப்படைய முடியாது. கிறிஸ்துவே இக்கருத்தை வலியுறுத்துகிறார். ஆகையால், நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவரென்று விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார். (யோவா. 8:24) இதை ஏற்றுக் கொண்டால் தான் நம் ஜீவன் இழந்து போயுள்ளது என்பதை விசுவாசிக்க முடியும். பிறகு, நாம் விசுவாசிப்பதோடு மாத்திரமல்ல, அந்த நற்செய்திக்குக் கீழ்ப்படிய வேண்டும். வேத வாக்கியங்களை நாம் தொடர்ந்து படித்தால், நற்செய்தியில், கட்டளைகள் உண்டு என்று நமக்கு சொல்லப்பட்டிருப்பது விளங்கும்.

முதலாவது, நாம் நற்செய்தியை கேட்க வேண்டும். ஆகவே தான், கிறிஸ்து உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று சீஷர்களுக்குக் கட்டளையிட்டார் (ரோமர் 16:15) விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தன்னுடைய வசனத்தினாலே வரும் என்று பவுல் சொல்லியுள்ளார். (மாற் 10:17) அதைத்தான் நாம் இப்பொழுது செய்து கொண்டுள்ளோம். நாம் விசுவாசிக்கும்படியாக தேவனுடைய வார்த்தையை படிக்கிறோம். இன்னும், அறிந்து கொள்ளும்படியாக நற்செய்தியை கேட்கிறோம். அடுத்து, நாம் நற்செய்தியை விசுவாசிக்க வேண்டும். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று கிறிஸ்து சொல்லியுள்ளார் (மாற்கு 16:16); விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் என்று எபிரெய ஆசிரியர் கூறியுள்ளார் (எபி. 11:6).

பிறகு, *மனந்திரும்புதல்* என்ற கட்டளை வருகிறது. அதன் பொருள் ஒருவன் தன் பாவங்களிலிருந்து விலக வேண்டும் அல்லது மோசமான, தவறான பழக்கங்களிலிருந்து விடுபட வேண்டும். ஒருவன் தன் பாவங்களிலிருந்து இரட்சிப்படைய வேண்டுமானால், தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பும் விருப்பமுள்ளவனாக இருக்க

வேண்டும். மனந்திரும்பாவிட்டால் அழிந்து போவீர்கள் என்று கிறிஸ்து கூறியுள்ளார் (லூக்கா 13:3) எங்குமுள்ள மனுஷர் யாவரும் மனந்திரும்ப வேண்டுமென்று கட்டளையிட்டுள்ளதாக பவுல் அறிவிக்கிறார் (அப். 17:30).

மனந்திரும்புதலுக்குப்பிறகு வருவது *அறிக்கையிடுதல்,* அதாவது, ஒருவன் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடவேண்டும். ஒருவன் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டுமெனதேவன் எதிர்பார்க்கிறார். ஒருவன் கர்த்தரைக் குறித்து வெட்கப்பட்டாலோ அல்லது அறிக்கையிட மறுத்தாலோ அவன் இரட்சிப்படைய முடியாது. நாம் மனிதர் முன்பாக அவரை அறிக்கையிட்டால் பரலோகத்திலிருக்கிற பிதா முன்பாக நம்மை அறிக்கையிடுவேன் என்று கிறிஸ்து கூறியுள்ளார் (மத் 10:32) இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை பண்ண வேண்டும் என்று பவுல் அப்போஸ்தலன் கூறியுள்ளார். (ரோமர் 10:10) ஞானஸ்நானம் பெறவேண்டுமானால், கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டுமென்று எத்தி யோப்பிய மந்திரியிடம் பிலிப்பு கேட்டார். (அப். 8:37)

இறுதியாக, ஒருவன் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும் அல்லது தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்பட வேண்டும் (மாற்கு 16:16) பாவங்கள் கழுவப்பட ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டும் என்று பிரசங்கித்தார் (அப். 2:38) ஞானஸ்நானத்தின் மூலமாக ஒருவன் கிறிஸ்துவை தரித்துக் கொண்டு, சபையில் சேர்க்கப்படுகிறான் என்பதற்கு பல வேத வசனங்கள் சான்றாக உண்டு. ரோமர் 6:3,4; 1 கொரி. 12:13; யோவா. 3:3-5 போன்ற வசனப்பகுதிகளில் சொல்லப்படும் மறுபிறப்பு இந்த வகையைச் சேர்ந்தது தான். எல்லாவற்றிற்கும் மேலாக, ஞானஸ்நானமானது இயேசு கிறிஸ்துவின் மரணம் அடக்கம், உயிர்த்தெழுதல் இவைகளின் சாயலாக உள்ளது.

அதாவது, கிறிஸ்து சிலுவையில் மரித்ததைப் போலவே, ஒரு பாவி தன்னுடைய பாவங்களுக்காக மரிக்கிறான். கிறிஸ்து அடக்கம் செய்யப்பட்டதைப் போலவே தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்படுகிறான். அதேபோல் தண்ணீருக்குள்ளிலிருந்து புதிய ஜீவனுக்காய் எழுந்து வருகிறான் (ரோமர் 6:1-12) இது மிக நேர்த்தியாக இல்லையா? பவுல் தொடர்ந்து இவ்விதம் விளக்குகிறார். முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்.

பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள் (ரோமர் 6:17,18) இங்கே இது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவைகளை ஏற்றுக்கொண்டு செய்யும் கீழ்ப்படிதல், மனந்திரும்புதல், தண்ணீருக்குள் அடக்கம் செய்யும் ஞானஸ்நானம் பிறகு உயிர்த்தெழுதலுக்கொப்பான மறுபிறப்பு ஆகிய எல்லாவற்றையும் குறிக்கிறது. இதற்கு முன்பாக, ஒருவன் பாவத்திற்கு அடிமையாயிருந்தான். ஆனால், இவைகளை நிறைவேற்

றியதற்குப் பின் அவன் நீதிக்கு அடிமையாயிருக்கிறான். ஆகையால் ஒருவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியும்பொழுது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலில் தனக்கிருக்கும் நம்பிக்கையை வெளிப் படுத்துகிறான். அது நற்செய்திக்குக் கீழ்ப்படிவதின் மூலம் நடைபெறும்.

ஒருவன் நற்செய்திக்குக் கீழ்ப்படிய முடியுமாதலால், தேவனை அறியாதவர்களுக்கும், நற்செய்திக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு ஒரு நாளில் கர்த்தர் மீண்டும் வருவார் என்று பவுல் சொல்லியுள்ளார். (2தெச 1:7-9) பேதுரு இவ்விதம் கூறுகிறார். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவகுங் காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனு டைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்ன மாயி ருக்கும்? (1பேதுரு 4:17) இந்த தேவ தாசர்களெல்லாம், பரிசுத்த ஆவி யினால் ஏவப்பட்டு, நற்செய்திக்குக் கீழ்ப்படியாதவர்கள் மேல் நீதி யுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படி கர்த்தர் வருவார் என்று சொல்லி யிருப்பதால், பரலோகம் செல்லும்படியாய் இரட்சிப்படைய ஒருவன் நற்செய்திக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பது எவ்வளவு அவசியம் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. நீதிமானே இரட்சிக்கப்படு வது அரிதாய் இருக்கும்போது, கர்த்தருக்குக் கீழ்ப்படிய எந்தவொரு முயற்சியும் செய்யாமலிருந்தால், நிலைமை என்னவாகும்?

மீண்டுமாக, ஒருவன் எப்படி நற்செய்திக்குக் கீழ்ப்படிவது? சத்தியத்தை அறிந்து கொள்ள ஒருவன் தேவனுடைய வார்த்தையை படிக்க வேண்டும் அல்லது விசுவாசிக்கும்படியாக வசனம் பிரசங்கிக் கப்படுவதைக் கேட்கவேண்டும். பிறகு, கிறிஸ்து தேவனுடைய குமார னென்றும், இந்த உலகத்தினின்றும், இனிவரும் உலகத்தினின்றும் அவரால் நம்மை இரட்சிக்க முடியுமென்றும் விசுவாசிக்க வேண்டும். அடுத்து, அவன் தன்னுடைய பாவங்கள் எல்லாவற்றிலுமிருந்தும் மனந் திரும்ப வேண்டும். அதன் பொருள் தன்னுடைய மோசமான எல்லா பழக்கங்களையும் விட்டுவிட வேண்டும். தேவ சித்தத்திற்கு விரோத மான காரியங்களை ஒருவன் தொடர்ந்து செய்து கொண்டு பாவத்திற் காய் மனந்திரும்ப முடியாது. மனந்திரும்புதலுக்கு பிறகு இயேசுக் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று தன்னுடைய இருதயத்தி லிருந்து வாயின் மூலம் வரும் வார்த்தைகளால் அறிக்கையிட வேண் டும். கிறிஸ்துவை விசுவாசியாதபட்சத்தில், அவர் தன்னை இரட்சிக்க வேண்டுமென்று ஒருவன் எதிர்பார்க்க முடியாது. இறுதியாக ஒருவன் ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டும் அல்லது பாவ மன்னிப்புக்காக தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்படவேண்டும்.

இப்பொழுது ஒருவன் இவைகளைச் செய்துவிட்டால் பிறகு கர்த்தர் இவனை இரட்சித்து அவருடைய சபையில் சேர்த்துக் கொள் வார். இது எவ்வளவு சுலபமானது? நீங்கள் கிறிஸ்தவராக இல்லா விட்டால் கிறிஸ்துவின் சபையில், அங்கமாக இல்லாவிட்டால் நீங்கள் தேவனுக்கு கீழ்ப்படிய இந்தப்பாடம் உதவுமென்று நம்புகிறேன்.

**J.C. CHOATE**

பெண்கள் பகுதி

# சிருஷ்டிப்பின் ஒழுங்கும், வீழ்ச்சியும்

கிறிஸ்தவர்களாகிய நாம், புதிய ஏற்பாட்டில் கொடுக்கப் பட்டுள்ள இயேசு கிறிஸ்துவின் சட்டத்திற்குள்ளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்த மக்களைக் கட்டுப்படுத்திய பழைய பிரமாணத்திலிருந்து, வித்தியாசப் பட்ட புதிய பிரமாணத்தை தேவன் தன் பிள்ளைகளுக்காக ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இருப்பினும், வேதாகம சரித்திர ரீதியாகப் பார்த்தால், மனிதனின் ஆரம்ப காலத்தில் நடந்த காரியங்களால், நாம் பாதிக்கப் பட்டிருக்கிறோம் என்பது தெரியும்.

தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபத்தில், பரிசுத்த ஆவி யானவர் பவுல் அப்போஸ்தலன் மூலமாக, பெண்களுக்குண்டான சில வேலைகள் மற்றும் அவர்களுடைய நடத்தைகள் பற்றிய போதனை களை கட்டளையாகக் கொடுத்துள்ளார்.

சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும் படிக்கு அவர்களுக்கு உத்திரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது (1கொரிந்தியர் 14:34) உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும். (1தீமோத்தேயு 2:12).

இந்தக் கட்டளைகள் பழைய ஏற்பாட்டில் நடந்த சரித்திர ரீதியான உண்மைகளின் விளைவே எனலாம்.

ஆதாம் முன்பு உருவாக்கப்பட்டான். பின்பு ஏவாள் உருவாக்கப் பட்டாள் (1தீமோத்தேயு 2:13).

ஏவாள் வஞ்சிக்கப்பட்டு, மீறுதலுக்கு உட்பட்டதின் விளைவாக மனுக்குலத்தின் வீழ்ச்சி ஏற்பட்டது. (வசனம் 14)

1 கொரி : 11:8,9,11,12 ஆகிய வசனப் பகுதிகளில் புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன் றினவள். புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள் ஆகிலும் கர்த்தருக்குள், ஸ்திரீ யில்லாமல், புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை. ஸ்திரீ யானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறது போல, புருஷனும் ஸ்திரீ யினால் தோன்றுகிறான். சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது.

இந்த வசனப் பகுதிகள் நமக்கு எதை வலியுறுத்துகிறதெனில், சிருஷ்டிப்பின் ஒழுங்கானது, தேவனுக்கு, ஆதியில் மாத்திரம் முக்கிய மானதாகத் தோன்றாமல், தொடர்ந்து குடும்ப அமைப்புத் திட்டத்திலும் ஒரு முக்கியப் பங்கை ஆற்றவே செய்கிறது. மனிதன், முதலாவது உருவாக்கப்பட்டபடியால், மனுஷியினுடைய தலையாக அவன் கருதப்படுகிறான்.

எந்த ஒரு அமைப்பும் ஒழுங்கில்லாமல் செயல்பட முடியாது. கட்டாயம் அதற்கு ஓர் அதிகாரம் வேண்டும். அந்த அதிகாரத்தில் இருப்பவர்கள், தங்களுக்குக் கீழ் இருப்பவர்களின் செயல்களுக்கு பொறுப்பாளிகளாக ஆக்கப்படுவார்கள். ஆதாம் முதலாவது சிருஷ்

டிக்கப்பட்டபடியால், தலைமைத்துவப் பொறுப்பு அவனுக்கு கொடுக்கப்பட்டது. தலைமைத்துவம் என்பது, அவன் தன் மனைவிக்கு எலலா வகையிலும் சிறந்த வழிகாட்டியாக இருந்து, அவளை சரியான பாதையில் வழி நடத்தியிருக்கிறானா? அல்லது தவறான பாதையில் வழி நடத்துயிருக்கிறானா? என்று தேவனுக்கு பதிலளிக்க வேண்டியது.

வேறு வகையில் பார்த்தால், ஆணுக்கு கொடுக்கப்பட்ட தலைமைத்துவம், பொறுப்பு இவைகளெல்லாம் பெண்ணின் முக்கியத்துவத்தைக் குறைத்து விடாது. உண்மையில், அவள், ஆணுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவளாயிருந்தாலும், ஒரு குடும்பத்தில், பிள்ளைகளைப் பெற்றெடுப்பதிலும், வளர்ப்பதிலும், ஒரு மனைவியாக, ஒரு தாயாக அவளுடைய பங்கில்லாமல், மனித இனத்தின் தொடர்ச்சியே இருக்காது. இந்த வகையில் ஆண், பெண் ஆகிய இருவரும் ஒருவரையொருவர் சார்ந்திருப்பது மாத்திரமல்ல, தேவனுடைய திட்டத்திலும் ஒரு முக்கியப் பங்கை வகிக்கின்றனர்.

தேவனுடைய சிருஷ்டிப்பின் கரத்திலிருந்து வந்தபோது, மனுக்குலம் பாவமில்லாமல் பூரணமாகவே இருந்தார்கள். இருப்பினும் தெரிந்தெடுத்துக் கொள்ளக்கூடிய உரிமையை தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்தார். தேவன் சில சட்டங்களை உருவாக்கி, அவைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிய வேண்டுமென்று விரும்பினார். அந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் போனதாலும், தெரிந்தெடுத்துக் கொள்ளும் உரிமையைத் தவறாக பயன்படுத்தியதாலும், அவர்கள் அந்தப் பூரண நிலையிலிருந்து விழுந்து, பாவிகளாக மாறினார்கள். பாவம், ஆவிக்குரிய சரீர மரணத்தைப் பிறப்பிக்கும் என்று தேவன் ஆதியிலேயே எச்சரித்திருந்தார்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி, நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும், நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். (ஆதி 2:16,17).

எனினும் சாத்தான் சர்ப்பத்தின் வடிவில் ஏவாளிடம் வந்து, நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் தேவன் சொன்னது உண்டோ? என்றது.

ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து, நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்; நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.

அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி; நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை, தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.

அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான் (ஆதி.3:3-6).

அப்போஸ்தலனாகிய பவுல் 1 தீமோ 2:14ல் கூறியது போல, ஏவாள் சர்ப்பத்தின் வார்த்தைகளால் வஞ்சிக்கப்பட்டாள். சாத்தானின் வார்த்தைகளால் ஊக்கப்படுத்தப்பட்ட அவள், பாவத்தை இந்த உலகத்திற்கு கொண்டு வந்துவிட்டாள்.

தேவன், பெண்ணுக்காகத் திட்டமிட்ட, குறிப்பிட்ட வேலைகளைச் செய்யும்படியாக அவள் பிரத்தியேகமாக அவரால் வடிவமைக்கப்பட்டாள். தன் கணவனுக்கு வாழ்க்கைப் பங்காளியாகவும், தன் வீட்டையும், தான் பெற்றெடுத்த பிள்ளைகளையும் பேணிக் காக்கும்படியாகவே அவளை சிருஷ்டித்தார். (1தீமோ. 5:14, தீத்து: 2:4,5) தேவனால் கொடுக்கப்பட்டிருக்கும் இவ்வேலைகளை அவருக்குப் பிரியமாக நிறைவேற்றுவதற்கு அவள் நம்பிக்கைக்குரியவளாகவும், மென்மையானவளாகவும், குடும்ப நலனில் அக்கறையுள்ளவளாகவும் இருப்பது அவசியம். அப்படி குடும்ப நலனில் மாத்திரம் அக்கறைகாட்டி செயல்படும்போது, சில நேரங்களில் தவறான முடிவுகள் எடுக்கவும், மற்றவர்களோடு பிரச்சினைக்குள்ளாகவும் வாய்ப்புண்டு.

சி.எஸ்.லூயிஸ் என்பவர் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பணிகளை பற்றி *ஒப்புக்குக் கிறிஸ்தவம்* (Mere Christianity) என்கிற தன் புத்தகத்தில் அருமையான கருத்தை எழுதியிருக்கிறார்.

தலைமை என்று ஒன்று இருக்க வேண்டுமானால், ஏன் அது ஆணாக இருக்க வேண்டும்? முதலாவது, ஒரு பெண்ணுக்குத் தான் தலைமையேற்றிருக்க வேண்டுமென்ற விருப்பம் எங்கேயாகிலும் உண்டா? நான் பார்த்த அளவில், தன் வீட்டின் தலையாக இருக்க விரும்பும் ஒரு பெண், அதே நிலைமை அடுத்த வீட்டில் இருப்பதை அறிந்தால் அதை வழக்கமாக விரும்புவதோ, ரசிப்பதோ இல்லை. தன் கணவனை அடக்கி ஆண்டு கொண்டு, பக்கத்து வீட்டு ஆசாமி பாவம் என்பார்கள். அவர்களிடம், நீங்கள் கெட்டிக்காரத்தனமாக உங்கள் கணவனை அதிகாரம் செய்து காரியமாற்றுகிறீர்கள் என்று பாராட்டினால், அய்யய்யோ, நான் அப்படிப்பட்டவளல்ல என்று சொல்லுவார்கள். தாங்கள், புருஷன் மீது அதிகாரம் செலுத்துவது வெளியே தெரியும்போது, தாங்களே அதற்கு வெட்கப்படுகிறபடியாலும், பெண்களுக்கு அடங்கி நடக்கிற ஆண்களை, பெண்களே நிந்திக்கிறபடியாலும், அப்படிச் செய்வது நியாயமற்றதென்று சொல்லாமலே தெரிகிறது.

ஆனால், இன்னும் ஒரு காரணமும் இருக்கிறது; திருமணமாகாதவனாகிய நான் மனந்திறந்து வெளிப்படையாகப் பேசுகிறேன்; ஏனென்றால், நான சொல்லப்போகிற காரணத்தை திருமண உறவிற்குள்ளிருந்து பார்த்துப் புரிந்து கொள்வதைவிட, அதற்கு வெளியிலிருந்து பார்ப்பது எளிதாக இருக்கும். வெளி உலகத்தோடு ஒரு குடும்பத்திற்கு இருக்க வேண்டிய உறவைப் பொருத்தவரையில் (இதை வெளியுறவுக் கொள்கை என்றும் அழைக்கலாம்) அக்குடும்பமானது இவ்வுறவுக்கான இறுதி ஆதாரமாக, ஆணையே சார்ந்திருக்க வேண்டும். ஏனென்றால், பொதுவாக ஒரு ஆண் வெளி உலகத்தாரோடு நியாயமாக நடந்து கொள்வான், அவன் நிச்சயம் அப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும். ஒரு பெண் பிரதானமாக தன் கணவனையும், குழந்தைகளையும் வெளி உலகத்திலிருந்து பாதுகாக்கும்படி, அவர்களுக்காக போராடு கிறவளாக இருக்கிறாள். தன் தேவைகளைக் காட்டிலும், அவள் தன் குடும்பத்தாரின் தேவைகளைச் சந்திக்க முற்படுவது, இயல்பானதாகவும், ஒரு விதத்தில் சரியானதாகவுமே இருக்கிறது. தன் குடும்பத்தாரின் தேவை

களை நிறைவேற்றுவாள் என்ற விஷயத்தில் இவள் சிறந்த நம்பிக்கைக் குரியவளாக இருக்கிறாள். அவள், இப்படி தான் குடும்பத்தாருக்கு கொடுக்கும் முக்கியத்துவங்களால், ஒரு மனைவி, நானே இவ்விஷ யத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தைப் பெற்றுவிடாதபடி, பார்த்துக்கொள்வது கணவனுடைய கடமை.

மனைவிக்கு இருக்கும் தீவிரமான குடும்பப் பற்றினால், அவள் மற்றவர்களுக்கு தீமையான காரியம் செய்துவிடாதபடி, அவர்களைப் பாதுகாப்பதில் கணவனே இறுதியான அதிகாரமுடையவனாக இருக் கிறான்.

இதில் உங்களுக்குச் சந்தேகம் இருக்குமானால், ஓர் எளிமையான கேள்வியை நான் கேட்கிறேன். அடுத்த வீட்டிலிருக்கும் பிள்ளையை உங்கள் நாய் கடித்து விட்டால், அல்லது அடுத்த வீட்டு நாய் உங்கள் குழந்தையை காயப்படுத்தினால், யாரை நீங்கள் முதலில் எதிர் கொண்டு சமாளிக்க வேண்டியதிருக்கும்? அந்த வீட்டு தலைவி யையா அல்லது தலைவரையா? நீங்கள் திருமணமான பெண்ணாக இருந்தால், உங்களிடம் நான் இந்தக் கேள்வியை கேட்கிறேன். உங்கள் கணவனைப் பற்றி புகழுவதைப் போலவே, அவனுடைய அணுகு முறையில், இருக்கும் தவறைக் குறித்து சொல்லும் போது, அவர் தன்னுடைய மற்றும் உங்களுடைய விருப்பங்களுக்காக அயலா ரோடு போராடுவதில் நீங்கள் நினைக்கும் அளவுக்கு தீவிரம் காட்டு வதில்லை என்றும், அவர் கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போகிறவர் என்றும் சொல்லுவீர்கள்? அப்படித்தானே!

ஏவாளிடம் இருந்த இந்த குணாதியசங்களினால், அவள் தேவனு டைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதை விட, சாத்தானுடைய வார்த்தைக ளுக்குக் கீழ்ப்படிவது, தன் குடும்பத்திற்கு சிறந்ததாக இருக்குமென்று எண்ணினாள். ஒருவேளை இப்படிப்பட்ட நினைப்புத்தான் அவளை சாத் தானுக்கு செவி கொடுக்கும்படி செய்திருக்கும். அவள் இப்படி யோசித் தது தவறானது, மாத்திரமல்ல, அது மனித குலம் அனைத்திகும் ஆபத் தை விளைவித்தது.

இந்த பரிதாபமான நிகழ்வில், முதல் முறையாக ஒரு பெண் தன் கணவனிடமிருந்து தலைமைப் பொறுப்பை எடுத்துக் கொள்வதை நாம் காண்கிறோம். ஓர் ஆணும், முதல் முறையாக அப்படிச் செய்யும் படி அனுமதிப்பதையும் பார்க்கிறோம். ஏவாள், ஆதாமிடம் அந்தக் கனி யைப் பறித்துப் புசிப்பது குறித்து ஆலோசனை செய்தாள் என்ப தற்கு நமக்கு ஆதாரமில்லை. ஆதாமும், தேவ கட்டளையை நன்றாக அறிந்திருந் தும், (ஆங்கில வேதம், ஆதாம் ஏவாளோடுதான் இருந் தான் என்று சொல்கிறது) (With him) அப்படி அவளோடு அவன் இருந்தும், அவன் அவளை தடை செய்ததாகத் தெரியவில்லை. ஒரு குடும்பத்திற்கான தலைமைத்துவத்தைப் பற்றிய தேவனுடைய திட்டத் தைத் தலைகீழாக மாற்றியதால், மீறுதலுக்கு உட்பட்டு, மனித குலம் வீழ்ந்து போனது என்பது எவ்வளவு பரிதாபமாக இருக்கிறது.

**பெட்டி சோட்** **BETTY CHOATE**

வாலிபர் பகுதி

# கிறிஸ்துவை பிரதிபலிப்போம்

பிரியமான வாலிப நெஞ்சங்களே, உங்களை மறுபடியும் இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த உலகத்திலே நாம் பார்க்கும்போது எல்லாவகையான பிரச்சினைகளையும் பார்க்கிறோம். உதாரணமாக பகை, போர், கொலைகள், ஒழுக்கக் கேடுகள், பாலியல் பலாத்காரங்கள், சமுதாயம் பின்னணி, மதம் மற்றும் பதவிப் பின்னணிகளை அடிப்படையாக வைத்து பட்சபாதம் காட்டுதல், வியாபாரங்களில் ஏமாற்று, மோசடி திருட்டு போன்ற காரியங்கள் இந்த உலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுபோன்ற காரியங்கள் நம்மை அதிகமாக துக்கப்படுத்துகின்றன. இவைகளின் முடிவைக்காண நாம் விரும்புகிறோம். ஒரு வேளை நாம் இந்த உலகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரியங்களைப் போல கிறிஸ்தவர்கள் மத்தியில் நடைபெறுவதில்லை என்று நினைக்கத்தோன்றும். ஆனால், இதைப்பற்றி நீங்கள் ஆழமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன். உலக முழுவதும் நாம் பார்க்கும் போது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை பிரிவினை, மாய்மாலம், கள்ள உபதேசங்கள், உலகத்தாரைப்போன்று வாழ்க்கை நடத்துதல், பொய், ஏமாற்று சபை காரியங்களில் ஈடுபாடின்மை போன்ற காரியங்கள் சீரழித்து வருகின்றன. மேலும் இன்றைய நாட்களில் அநேக கிறிஸ்தவர்கள் இல்லங்களில் வேத வாசிப்பும், ஜெபமும் கிடையாது. அது மாத்திரமல்லாமல், கிறிஸ்தவர்கள் அனுதினமும் தங்கள் குழந்தைகளுக்கு வேதாகமத்தைப் போதிப்பதில்லை. இன்னும் அநேக கிறிஸ்தவ தேவனையும், அவருடைய ராஜ்யத்தையும் விட அதிகமாக உலகப் பொருள்களை நேசிப்பதும், தேவனுடைய ராஜ்யம் விரிவடைவதற்காக கொடுக்க வேண்டிய அளவிற்கு காணிக்கை கொடுக்காமல் இருப்பதுமாய் இருக்கிறார்கள்.

கிறிஸ்தவர்கள் மத்தியில் நடைபெறும் இதுபோன்ற காரியங்கள் நம்மை அதிகமாக துக்கப்படுத்த வேண்டும். சபையிலே இதுபோன்ற காரியங்களை களைந்தெறிய நாம் பாடுபடவேண்டும். இது போன்ற பிரச்சனைகள் எல்லாம் உலகத்திலும், சபையிலும் ஏன் காணப்படுகின்றன? அநேகப் பிரச்சனைகள் ஜனங்கள் சரியாக சிந்திக்காமல் இருப்பதால் தான் ஏற்படுகின்றன. நாம் எப்படிப்பட்ட சிந்தையுடையவர்களாய் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அப்படி சிந்தியாமல் இருப்பதால் அநேக பிரச்சனைகளை நாம் சந்திக்கிறோம். அதாவது, கிறிஸ்துவின் குணாதிசயங்களை நாம் வாழ்கின்ற இந்த உலகத்தில் பிரதிபலிக்கிறவர்களாக இருந்தால் எல்லாப் பிரச்சனைக

களுக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிடலாம். கிறிஸ்துவின் குணாதிசயங்களை பிரதிபலிக்க வேண்டுமென்றால் அவர் எப்படிப்பட்ட குணாதிசயங்களை பெற்றிருந்தாரோ அவைகளை நாம் வாழ்கின்ற இந்த உலகத்தில் பிரதிபலிக்கிற வர்களாக இருந்தால் எல்லாப் பிரச்சனைகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்துவிடலாம். கிறிஸ்துவின் குணாதிசயங்களை பிரதிபலிக்க வேண்டுமென்றால் அவர் எப்படிப்பட்ட குணாதிசயங்களை உடையவராய் இருந்தார் என்பதை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

## *தாழ்மை*

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைச் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் (பிலிப்பியர் 2:6,7). நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து தாழ்மைக்கு சிறந்த முன்மாதிரியாக இருக்கிறார். பெருமையும், கர்வமும் பிடித்த இந்த உலகத்தில் ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாகிய இயேசு தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். நாமெல்லாரும் இயேசு கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்ற கட்டளைப் பெற்றிருக்கிறோம். இந்த பெருமையானது கர்த்தர் வெறுக்கும் காரியங்களில் ஒன்றாக இருக்கிறது. *மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்* என்று நீதிமொழிகள் 16:5ல் நாம் வாசிக்கிறோம்.

வேதாகமத்தில் தேவனுக்கு விரோதமாகப் பெருமை பாராட்டியவர்கள் ஒன்றுமில்லாமல் போயிருக்கிறார்கள். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டும். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்திச் சென்ற மோசே ஒரு மாபெரும் தலைவனாயிருந்தும் தன்னை முற்றிலுமாக தாழ்த்தினான் என்று பார்க்கிறோம். எண்ணாகமம் 12:3ல் மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தமுள்ளவனாயிருந்தான் என்று நாம் வாசிக்கிறோம். எனவே தேவன் நம்மை ஏற்ற காலத்தில் உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க வேண்டும்.

## *அன்பு*

அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார் (1யோவான் 4:8). அன்பான தேவனை பெற்றுக் கொண்டிருக்கிற நாம் அன்பிலே குறைவுள்ளவர்களாயிருக்கிறோம். முன்பு ஒரு காலத்தில் கிறிஸ்தவர்கள் அன்புக்கு பேர் போனவர்கள் நான் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் நிலங்கள், உடைமைகளையெல்லாம் விற்று இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவிச் செய்தார்கள். எனவே, சகோதரர்கள் மத்தியில் சமத்துவம் ஏற்பட்டது. ஆனால், இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் மத்தியில்

அன்புக்கு மிகப்பெரிய குறைச்சல் ஏற்பட்டுள்ளது. கிறிஸ்து எவ்வளவு அன்பும், மனதுருக்கமும் உடையவராக இருந்தார். எனவே, கிறிஸ்துவை பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொண்டு அன்பில்லாமல் இருந்தால் அப்படிச் செய்வது வீணான காரியமாகும். யோவான் 13:34,35 வசனங்களில் இயேசு, *நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன் நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார்.* நாம் மற்றவர்களிடம் அன்பு செலுத்து வதினால் கிறிஸ்துவின் நாமத்தை நிச்சயமாகவே மகிமைப்படுத்த முடியும். இந்த உலகமானது கிறிஸ்தவர்களிடமிருந்து அதிகமான காரியங்களை எதிர்பார்க்கிறது. எனவே தான் கிறிஸ்தவர்கள் ஏதாவது தவறான காரியத்தை செய்துவிட்டால் இவர்களா இப்படிச் செய்தார்கள் என்று ஆச்சரியத்தோடு கேட்பதுண்டு. கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய போதனைகளைப் பற்றியும் உலகத்தாரும் கூட ஓரளவு அறிந்து வைத்திருக்கிறார்கள். எனவே தான் கிறிஸ்தவர்களாகிய நமக்கு கிறிஸ்துவின் குணாதிசயங் களை பிரதிபலிப்பது அவசியமாயிருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் நாம் கிறிஸ்துவின் சீஷர்களென்று உலகம் அறிந்து கொள்ளும், அதினால் தேவனு டைய நாமம் மகிமைப்படும். ஆவியின் கனியைக் கொடுக்க கிறிஸ்த வர்களாகிய நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆவியின் கனியில் அன்பு தான் முதலிடம் வகிக்கிறது. அன்பானது எல்லா நற்காரியகளுக்கும் ஊற்றும், உறைவிடமுமாயிருக்கிறது.

நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும் போது மற்றவர்களுடைய தப்பிதங்களை நாம் மன்னிக்கும் குணாதிசயத்தை உடையவர்களாய் காணப்படுவோம். இது தேவன் நம்முடைய தப்பிதங்களை மன்னிக்க வகை செய்யும். அதுமாத்திரமல்ல, நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும் போது நிச்சயமாகவே நாம் தேவனிடத்தில் அன்பு கூறுவோம். அப்போது அவருடைய கற்பனைகளையும் கைக்கொள்ளுவோம். தேவன், *நாம் இந்த உலகத்தாரை விட வித்தியாசமாயிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.* எனவே, உலகத்தி லும், சபையிலும் ஏற்படும் பிரச்சனைகளைத் தவிர்க்க நாம் கிறிஸ்துவின் குணாதிசயங்களை பிரதிபலிப்போம், அப்படிச் செய்து உலகத்தில் நாம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவோம், தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம், கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!.

*பென்னி மார்டீன்*

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது [பிலி. 2:5].

சிறுவர் பகுதி

# தீமோத்தேயுவும், அவன் பாட்டியும், தாயும்

சிறு பிள்ளைகளே உங்களை மீண்டும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். சென்ற மாதத்தின் பாடம் நன்றாக இருந்திருக்கும் என நம்புகிறேன். சரி, இந்த மாதமும் ஒரு சிறந்த பாடத்தை உங்களுக்கு அளிக்கிறேன். இது ஒரு வாலிபனைப் பற்றியதான பாடம். வாலிபத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நமக்கு வாலிபனைப் பற்றிய பாடம் பிரயோஜனமாய் இருக்கும். யார் அந்த வாலிபன் என்பதை தொடர்ந்து படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு நெருக்கமாக இருந்த தீமோத்தேயுவை பற்றி புதிய ஏற்பாடு நமக்கு சொல்லுகிறது. அவன் வேதாகமத்தின் முதன் முதலாக அப். 16:1-3-ல் காணப்படுகிறான். அங்கே அவனைப் பற்றி என்ன கூறுகிறது தெரியுமா? நற்சாட்சி பெற்றவனாயிருந்தான் என்று கூறுகிறது. அவன் தன் வீட்டை விட்டு பவுலோடு வெகு தூரம் சென்று தானாக பிரசங்கிக்கத் தொடங்கினான்.

பவுல், தீமோத்தேயுவுக்கு எழுதின கடிதங்களில் (1தீமோ 2, தீமோ) அவன் பொறுப்புள்ளவனும், கடின உழைப்புள்ளவனும் மென்மையான இருதயமுள்ளவனும், தேவனிடத்தில் அன்பாயிருக்கும் வாலிபன் என்றும் கூறியுள்ளார். இதற்கு எது காரணம் என நினைக்கிறீர்கள்? முதலில், தீமோத்தேயு தன்னைத் தானே உயர்த்தி சிறந்தவனாக தன்னை கருதவில்லை. பவுல் இப்படிக் கூறுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு? தொடர்ந்து வாசியுங்கள்.

தேவனையும், பழைய ஏற்பாட்டையும் நேசிக்க வேண்டும் என்று அவன் தாயாகிய ஐனிக்கேயாளும், அவன் பாட்டியாகிய லோவி சாளும் அவனுக்கு கற்பித்தார்கள். அவனுக்கு தேவனுடைய வார்த்தையை இளம் வயதிலேயே கற்பிக்க வேண்டுவது அவசியம் என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள். உபா. 6:7-9-ல் யூதர்களுக்கு மோசே கொடுத்த வாக்கின்படி சிறு பிள்ளைகளுக்கு தினமும் வேதத்தை கற்பிக்க வேண்டும் என்பதில் விசுவாசமுள்ளவர்களாய் அவர் கள் இருந்தார்கள்.

தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபத்திலே பவுல் அவன் தாயையும், பாட்டியையும் புகழ்ந்து பேசுகிறார். அவர்களின் விசுவாசத்தையும் அதை தீமோத்தேயுவுக்கு கற்பித்த முறையையும் அவர் (பவுல்) புகழ்கிறார். தீமோத்தேயு வளர்ந்த ஒரு சிறந்த ஊழியனாகவும் சபையில்

முன்னோடியாகவும், பவுலின் நண்பனாகவும் மாறுவான் என்று அவன் தாயும், பாட்டியும் அறிந்தார்களா? இல்லை. ஆனால், அவர்களுக்கு ஒன்று தெரிந்திருந்தது, அது என்ன தெரியுமா? சிறு வயதில் அவனுக்கு கற்பித்தால் ஒரு நல்ல வாலிபனாக வருவான் என்பதே அது.

தீமோத்தேயுவின் தந்தை கிரேக்க விக்கிரகங்களை வணங்குகிறவர், அது எதை நமக்கு உணர்த்துகிறது? அவர் தேவ பக்தி இல்லாதவர். எபே 6:4ல் உள்ளபடி அவர் தனது பிள்ளையை கர்த்தருக்கு ஏற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்க ஒரு முயற்சியும் செய்யவில்லை. இப்படி ஒரு கணவனை பெற்றதால் தீமோத்தேயுவின் தாயாகிய ஐனிக்கேயாளுக்கு அவள் செய்யும் வேளை சற்று கடினமாயிருந்திருக்கும் அல்லவா?.

தீமோத்தேயுவுக்கு அருமையான தாயும் பாட்டியும், பிறகு பவுல் என்ற சிறந்த நண்பனும் கிடைத்தார்கள். பவுல் அவனை நேசித்து புத்தி சொல்லத் தொடங்கினார். அவன் அவர் களுக்கு கீழ்ப்படிந்து நடந்தான். அவர்களின் உபதேசத்தையும் வழியையும் கேட்டு அதின்படி செய்தான். ஏன் தெரியுமா? அவர் களை அவன் நேசித்தான். சரி, இதிலிருந்து நாம் கற்கும் பாடம் என்ன? நாமும் நம்முடைய பெற்றோருக்கும், தாத்தா பாட்டிமார்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும். ஏன்? தேவன் அவர்களை நமக்கு கற்பிக்கவே தந்திருக்கிறார். நாமும் நம்முடைய பங்கை தீமோத்தேயு போல கீழ்ப்படிந்து நாமும் தீமோத்தேயுவை போல சிறந்த கிறிஸ்தவனாக வரமுடியும். அப்படிச் செய்வீர்களா? செய்ய வேண்டும். சரியா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! நாம் அடுத்த மாதம் சந்திப்போம்.

**ஏபில் ரோஜர் நாயகம்**

## உங்களுக்கு ஞானம் வேண்டுமா?

1. கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி. 1:7)
2. உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். (யாக். 1:5).

# விசுவாசத்தின் அடிப்படைகள்

நாம் கிறிஸ்துவின் சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்தினராயிருப்பதோடு தொடர்புடைய சில காரியங்களை படித்து வருகிறோம். புதிய ஏற்பாட்டின் வரலாற்று புஸ்தகமாகிய அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் நாம் பார்க்கிறபடி ஆதிக்கிறிஸ்தவர்கள் நமக்கு அளித்திருக்கிற அருமையான உதாரணங்களை நாம் தொடர்ந்து விவரமாக ஆராய்வோம்.

அப். 4:13 வாசியுங்கள் அங்கே ஜனங்கள் பேதுருவினிடத்திலும், யோவானிடத்திலும் எதைக்கண்டார்கள்? கிறிஸ்துவுக்குள் இருந்த இந்த இரு சகோதரர்களின் தைரியத்தை ஜனங்கள் கண்டார்கள்! அவர்களுடைய வாழ்க்கையையும், தைரியமான போதகத்தையும், சிறந்த முன்மாதிரியாக வைத்து அவர்களை எவ்வளவாய் பின்பற்ற வேண்டும்? அந்த ஜனங்கள் பேதுருவையும், யோவானையும் பற்றி என்ன அறிந்து கொண்டார்கள்? அந்த ஜனங்கள் அந்த இரண்டு சகோதரர்களும் படிப்பறிவு இல்லாதவர்களென்றும், பேதமையுள்ளவர்களென்றும் அறிந்து கொண்டார்கள்! ஆயினும் அவர்கள் தைரியமாக வாழவும், பிரசங்கிக்கவும் செய்திருக்கிறார்கள்!.

பேதுருவும், பவுலும் படிப்பறிவு இல்லாதவர்களும், பேதமையுள்ளவர்களுமாயிருந்த போதிலும் தைரியமாக பிரசங்கிக்கிறதை கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஜனங்கள் ஆச்சரியப்பட்ட பிறகு எதை அறிந்து கொண்டார்கள்? பேதுருவும், யோவானும் இயேசுவோடு இருந்ததை அறிந்து கொண்டார்கள். தெளிவாகவே, இயேசு அந்த இரண்டு சகோதரர்களுடைய வாழ்க்கையிலும், போதகத்திலும் ஒரு பெரிய தாக்கத்தை உண்டாக்கியிருக்கிறார். இயேசு அவர்களுக்காக செய்தவைகளினிமித்தம் தேவ ஆட்டுக்குட்டியை தங்கள் முழு இருதயத்தோடும் நேசித்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் அருமை இரட்சகருக்காக அனுதினமும் வாழ்ந்து அவருக்காக எந்த நேரத்திலும் மரிக்க ஆயத்தமாயிருந்தார்கள்.

பிரியமானவர்களே, இன்று ஜனங்கள் நம்முடைய வாழ்க்கையையும், போதகத்தையும் பார்த்து நாம் இயேசுவோடு இருக்கிறோம் என்று ஜனங்கள் சொல்வார்களா? நீங்களும், நானும் பேதுருவையும், யோவானையும் போல இயேசுவோடு கூட சரீரப்பிரகாரமாக இருந்ததில்லை என்பது உண்மைதான். ஆனாலும், தேவன் கிருபையாக புதிய ஏற்பாட்டில் தம்முடைய நேச குமாரனாகிய இயேசுவின் வார்த்தைகளையும், வாழ்க்கையையும் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாக எழுதிக்கொடுத்திருக்கிறார்.

ஆகவே, இன்று நீங்களும், நானும் இயேசுவோடு இருக்க முடியும் எப்படி? நாம் வாழ்கின்ற ஒவ்வொரு நாளிலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள வார்த்தைகளையும், வாழ்க்கையையும் விவரமாகவும் ஆழமாகவும் சிந்தித்து பார்க்க வேண்டும்! கிறிஸ்துவின் வார்த்தைகள் நம்முடைய இருதயங்களில் வாசம் செய்யும்படிக்கு அப்படிப்பட்ட வார்த்தைகளை நம்முடைய

இருதயங்களில் தியானம் செய்வதின் மூலமாகவும், மனப்பாடம் செய்வ தன் மூலமாகவும் நாட்டவேண்டும். இயேசு இந்த பூமியில் குறுகிய காலம் வாழ்ந்த போது அவர் தமக்கு முன்வைத்துப்போன சிறந்த மாதிரியை நீங்களும், நானும் தீவிரமாகப் படிக்க வேண்டும்.

ஆனால், அதுமட்டும் போதுமானதல்ல பிரியமானவர்களே, நீங்களும், நானும் அந்த வார்த்தைகளை கிரியைகளில் காட்ட வேண்டும், அப்போது நாம் யாரிடமெல்லாம் தொடர்பு கொள்ளு கிறோமோ அவர்கள் நம்மில் எஜமானாகிய இயேசு வாழ்கிறதையும், தம்முடைய வார்த்தைகள் மூலமாக நம்முடைய வாழ்க்கையில் ஆட்சி செய்வதையும் கண்பார்கள்! உண்மையிலேயே அவருடைய வார்த்தைகளை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல வார்த்தைகளின்படி செய்கிறவர்களாயும் இருக்க வேண்டும் (யாக் 1:22,25).

தயவு செய்து கீழ்க்காணும் கருத்தை ஜாக்கிரதையாக சிந்தியுங் கள். நீங்களும், நானும் தினமும் இயேசுவோடு இருப்பதை போல வாழவும், போதிக்கவும் செய்தால் அவருக்காகவும், அவருடைய மகிமைக்காகவும் நாம் செய்யும் நற்காரியங்களுக்கு எல்லையே இல்லை! நாம் ஒவ்வொருவரும் அதை நம்முடைய முழு பலத்தோடு செய்வோமாக!.

அப். 4:32-35 வசனங்களை வாசியுங்கள். இங்கே தேவன் ஆதிக்கிறிஸ்தவர்களின் அழகான சித்திரத்தை வெளிப்படுத்துகிறார். அவர்களைப் பற்றி தேவன் என்னச் சொன்னார்? முதலில், அவர்கள் ஒரே இருதயமும், ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள் அதாவது, அவர்கள் ஒன்றாக தோற்றம் அளிக்கும் அளவிற்கு ஒன்றாக இணைக் கப்பட்டிருந்தார்கள்! இரண்டாவது, அவரவர் தங்களுக்கு உண்டான வைகளை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்க மனமுவந்தபடியால் முற்றிலுமாக தன்னலமற்றவர்களாயிருந்தார்கள். மூன்றாவது, நிலங்களையும், வீடுகளையும் உடைய கிறிஸ்தவர்கள் அவைகளை விற்றார்கள். விற்கப்பட்டவைகளின் கிரயத்தை அவர்கள் என்ன செய் தார்கள்? அவைகளை கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத் திலே வைத்தார்கள்! அவைகளை அப்போஸ்தலர்கள் என்ன செய்தார் கள்? அவர்கள் அவைகளை தேவையில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தார்கள்! அவர்கள் இப்படி உதாரத்துவமாக கொடுத்த தின் விளைவு என்னவாயிருந்தது? அந்த கிறிஸ்தவர்களில் ஒருவருக் கும் ஒன்றும் குறைவுபடவில்லை!.

உண்மையாகவே, ஆதிக்கிறிஸ்தவர்களுக்கு கர்த்தர் மீதும், சக கிறிஸ்தவர்கள் மீதும் இருந்த அன்பானது அந்த பட்டணத்தில் பிரகாச மாக மின்னியது. அதன் விளைவாக தேவன் மகிமைப்பட்டார்! நமக் கும் கர்த்தர் மீதும், சக கிறிஸ்தவர்கள் மீதும், கிறிஸ்துவின் ஆவிக் குரிய சரீரத்திற்கு வெளியே உள்ளவர்கள் மீதும் இதே விதமான அன்பு இருக்குமானால் இருளின் மத்தியில் பிரகாசமான ஒளியாக ஒளி வீசுவோம்!.

அப். 5:17-21 வசனங்களை வாசியுங்கள். பதினான்காம் வசனத்தில் திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்க ளாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள் என்று வாசிக்கிறோம். 17 மற்றும் 18 வசனங்களின்படி இந்த வளர்ச்சிக்கு

பிரதான ஆசாரியர் மற்றும் சதுசேயர்களின் பதில் என்னவாயிருந்தது? அவர்கள் பொறாமையினால் நிறைந்திருந்தார்கள்! அவ்வளவுதானா? இல்லை! அந்த துன்மார்க்கமான மனுஷர் அப்போஸ்தலர்களைப் பிடித்து, பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள்!

கர்த்தருடைய தூதன் அப்போஸ்தலர்களை சிறைச்சாலையிலிருந்து விடுவித்த போது, அவர் அப்போஸ்தலர்கள் என்ன செய்யும்படியாக கூறினார்? அந்த தூதன் அப்போஸ்தலர்களைப் பார்த்து, தேவாலயத்திலே நின்று இந்த ஜீவ வார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான். இது கர்த்தருக்கும், அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிகிற ஒவ்வொருவருக்கும் ஆவிக்குரிய மற்றும் நித்திய ஜீவனைக் கொண்டு வருகிற சுவிசேஷ செய்தியைத் தான் தெளிவாக குறிக்கிறது!.

இந்த கேள்வியை நான் உங்களிடத்தில் கேட்கிறேன் பிரியமானவர்களே! நீங்களும், நானும் அப்போது உயிரோடிருந்திருந்தால், அந்த அப்போஸ்தலர்களாக இருந்திருந்தால், அந்த தூதன் சொன்னவைகளுக்கு கீழ்படிந்திருப்போமா? இயேசுவை பின்பற்றினதற்காக அவரை பிரசங்கித்ததற்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்தால் அந்த ஜீவ வார்த்தைகளை தைரியமாக பிரசங்கித்திருப்போமா? அப்போஸ்தலர்கள் என்ன செய்தார்கள்?.

அவர்கள் அதிகாலமே தேவாலயத்தில் பிரவேசித்தார்கள்! அவர்கள் கீழ்ப்படிய ஆவலாயிருந்தார்கள்! தேவாலயத்தில் அப்போஸ்தலர்கள் என்ன செய்தார்கள்? தேவதூதன் தங்களுக்கு கட்டளையிட்டபடியே ஜனங்களுக்கு போதித்தார்கள்! அந்த சகோதரர்களுக்கு எப்படிப்பட்ட அன்பும், தைரியமும் இருந்தது என்று பாருங்கள்!.

அப். 5:27-29 வசனங்களை நாம் வாசிக்கும் போது அப்போஸ்தலர்கள் மறுபடியும் அந்த மதத்தலைவர்களுக்கு முன்பாக கொண்டு வரப்பட்டார்கள். அந்த துன்மார்க்கமான மனுஷர் இதற்கு முன்பு அப்போஸ்தலர்களுக்கு என்ன கட்டளையிட்டிருந்தார்கள்? அவர்கள் அப்போஸ்தலர்களுக்கு இயேசுவின் நாமத்தைக் குறித்து போதகம் பண்ணக்கூடாதென்று கட்டளையிட்டிருந்தார்கள். அந்த வல்லமையுள்ள தலைவர்களின் கட்டளைகளுக்கு அப்போஸ்தலர்கள் எப்படியாக பதில் கொடுத்தார்கள்? அந்த உண்மையுள்ள சகோதரர்கள் எருசலேமை தங்கள் போதகமாகிய இயேசுவின் போதனையால் நிரப்பினார்கள்! உண்மையாகவே, தேவனை நேசித்த, தேவ பயமுள்ள மனுஷர்களுக்கு மனிதர்களைப் பற்றிய பயமே இல்லாதிருந்தது!

நீங்கள் வாழும் இடத்தை கிறிஸ்துவின் உபதேசத்தினால் நிரப்பி விட்டீர்களா? இல்லையென்றால், ஏன் அப்படிச் செய்யவில்லை? நாமும் அதே வல்லமையுள்ள இரட்சகரை பின்பற்றுகிறோம். அவருடைய புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் அவருடைய அதே வல்லமையுள்ள செய்தி இன்னும் நமக்கு இருக்கிறது. இந்த பிரியமான சகோதரர்களுக்கு கொடூரமான, மூர்க்கமான சத்துருக்கள் இருந்தார்கள். ஆயினும் தங்கள் அருமையான இரட்சகருடைய ஆத்துமாவை இரட்சிக்கின்ற செய்தியினால் அவர்கள் எருசலேமை நிரப்பினார்கள்! நமக்கு தூண்டுகோலாக இருக்கக்கூடிய அவர்களுடைய உதாரணத்தினால் நாம் எப்படியாக ஊக்கப்படுத்தப்பட வேண்டும்!.

பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் ஆலோசனை சங்கத்தார் கிறிஸ்துவின் நாமத்தைக் குறித்து போதகம் பண்ணக் கூடாதென்று கட்டளையிட்டபோது பிரதான ஆசாரியனின் கேள்விக்கு எப்படியாக பதிலளித்தார்கள்? பேதுருவும் மற்றும் அப்போஸ்தலர்களும் அளித்த பதிலைப் பாருங்கள் *நாங்கள் மனுஷருக்கு கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்கு கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது!*

எத்தனை ஆழமான, வல்லமையான பதில்! மறுபடியும் நீங்களும் நானும் இந்த தேவ மனுஷர்களிடமிருந்து கற்றுக்கொண்டு இவர்களுடைய மாதிரியை பின்பற்ற வேண்டும்!.

அவர்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளுக்கும் உபதேசம் பண்ண வேண்டும் என்று இயேசு அவர்களுக்கு கட்டளையிட்டிருந்தார் (மத். 28:19). அவர்கள் உலகெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும் என்று இயேசு அவர்களுக்கு கட்டளையிட்டிருந்தார் (மாற்கு 16:15). யூதத்தலைவர்கள் இயேசுவின நாமத்தைக் குறித்து போதிக்கக்கூடாது என்று அப்போஸ்தலர்களுக்கு கட்டளையிட்டிருந்தார்கள். எனவே, தேவன் (இயேசு) கட்டளையிட்டதற்கும் இந்த மததத்லைவர்கள் கட்டளையிட்டதற்கும் நேரடியான முரண்பாடிருநதது.

அப்போஸ்தலர்கள் அந்த வல்லமையுள்ள மனிதர்களுக்கு கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்கு கீழ்ப்படிவது என்கின்ற தைரியமான முடிவை எடுத்தார்கள். அந்த துன்மார்க்கமான மனுஷருக்கு கீழ்ப்படியாமறபோனால் சரீரப்பிரகாரமான ஆபத்து இருக்கிறது என்பதை அறிந்திருந்த போதிலும் அப்போஸ்தலர்கள் இப்படிப்பட்ட முடிவை எடுத்தார்கள். அந்த துன்மார்க்கமான மனுஷர் ஏற்கனவே அப்போஸ்தலர்களின் அன்பான எஜமானை கொலை செய்திருந்தார்கள்.

நீங்களும், நானும் எப்படியிருக்கிறோம் பிரியமானவர்களே? ஒவ்வொரு நாளும் தேவனுக்கு கீழ்ப்படிகிறோமா? அல்லது மனுஷனுக்கு கீழ்ப்படிகிறோமா? தேவன் தம்முடைய வார்த்தையில் ஒன்று சொல்கிறார். ஆனால், நம்முடைய உறவினர்கள் தேவனுடைய வார்த்தைக்கு புறம்பாக நாம் செய்யும்படி நம்மை வற்புறுத்துகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்போது நாம் தேவனுக்கு கீழ்ப்படிவோமா அல்லது உறவினர்களுக்கு கீழ்ப்படிவோமா? தேவன் தம்முடைய வார்த்தையின் ஒன்றை செய்யும்படியாக சொல்கிறார். ஆனால், நம்முடைய தேசத்து கலாச்சாரம் தேவனுடைய கட்டளைக்கு எதிராக நாம் செய்ய வேண்டும் என்று சொல்கிறது. அப்போது நாம் தேவனுக்கு கீழ்ப்படிவோமா? அல்லது கலாச்சாரத்திற்கு கீழ்ப்படிவோமா?.

அநேக கிறிஸ்தவர்கள் தேவனை நேசிக்கின்ற, தேவ பக்தியுள்ள, கிறிஸ்துவின் ஒன்றான மெய் சபையிலே அங்கத்தினராயிருப்பவரை வாழ்க்கைத் துணையாக தெரிந்தெடுக்கிற காரியத்தில் தேவனுக்கு கீழ்ப்படியாமல் குடும்பம் மற்றும் கலாச்சாரத்திற்கு கீழ்ப்படிந்து விடுகிறதை மிகவும் வருத்தத்தோடு தெரிவிக்கிறேன். அதே போல கர்த்தருக்கு உதாரத்துவமாய்க் கொடுக்க தவறுகிற கிறிஸ்தவர்களை காண்கிறேன்; அதுபோலவே, ஞாயிற்றுக்கிழமைகளில் உறவினர்கள் வந்துவிட்டால் தேவனை ஆராதிக்கத் தவறுபவர்களை, கர்த்தரிடமிருந்து வழிவிலகிச் செல்பவர்களை, ஒரு பிரசங்கியாராக, வேதாகம மாணவரா இருந்து கொண்டு அதை விட்டுவிட்டுப் போகிறவர்களை, தேவனை உண்மையோடும், ஆவியோடும் ஆராதிக்காத மார்க்க பிரிவினை கூட்டத்தினரோடு சேர்ந்து அவர்களுடைய ஆராதனைகளில் பங்கு பெறுபவர்களை; வாரத்தின் மற்ற நாட்களில் உலகத்தாரைப் போல வாழ்கிற

வர்களை, கர்த்தருக்காக நிற்காமல், நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் உடன் வேலை செய்பவர்களுடைய தவறுகளை எதிர்க்காமல், சபையின் வேத ஆராய்ச்சி வகுப்புகளை புறக்கணிப்பவர்களையும் நான் காண்கிறேன் என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவிக்கிறேன்.

பிரியமானவர்களே, காரியங்கள் இப்படியாக இருக்கக்கூடாது! நீங்களும், நானும் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால், அவரை மகிமைப்படுத்த வேண்டுமென்றால், அவரோடு பரலோகத்தில் நித்தியத்தை கழிக்க வேண்டுமென்றால் தொடர்ந்து மனுஷருக்கு கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்கு கீழ்ப்படிகிறதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் உள்ள கிறிஸ்துவின் மெய்யான சபையில் அங்கத்தினர் ஒவ்வொருவரும் எல்லா விதத்திலும் அந்த ஆதி கிறிஸ்தவர்களின் அற்புதமான தூண்டுகோலாக இருக்கக்கூடிய மாதிரியைப் பின்பற்றவேண்டும். அதற்காக பாடுபடவேண்டும் என்பது என்னுடைய ஜெபமாயிருக்கிறது. அடுத்த மாதம், நம்முடைய எஜமானை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழுமனதோடும், நேசித்தவர்களின் வாழ்க்கை, மற்றும் போதனைகளை நாம் படிக்கும் போது தொடர்ந்து பரவசமடைந்து கவரப்படுவோம் என்று நான் நம்புகிறேன்!.

**BENNY MARTIN** **CHARLIE DIPALMA**

# நீங்களும் இவர்களில் ஒருவரா?

பயணங்களில் உள்ள நம்மில் அநேகர் சில நேரங்களில் நாம் பயணிக்க வேண்டிய பேருந்து அல்லது பாதை இவைகளில் சந்தேகங்கள் ஏற்பட்டு நம் கண்ணில் படும் சக மனிதர்களிடம் உதவி கோரும் போது, நம்மை விட மோசமான குழப்பத்தில் உள்ள சில பெரிய மனிதர்கள், எல்லாம் தெரிந்தவர்கள் போல தவறான செய்தியைச் சொல்லி நம்மை சிக்கலில் மாட்டிவிட்டுவிடுகின்றனர். இதைப் போலவே, இன்று பரலோகம். மோட்சம், சொர்க்கம் என்று மக்களால் எதிர்பார்க்கப்படும் ஒரு சிறப்பான இடத்திற்குச் செல்ல வழி தெரியாமல் தவிக்கும் மனிதர்களுக்கு தெளிவான பாதையை காண்பிக்க வேண்டிய சமய பெரியவர்கள், தங்களுக்கே அந்த சரியான பாதை தெரியாத நிலையிலும் எல்லாம் தெரிந்தவர்கள் போல துணிவுடன் தவறான வழிகளில் மக்களை திசைத் திருப்பிக் கொண்டு இருக்கின்றனர். இது எவ்வளவு பரிதாபமான நிலை! இதில் பாதை தெரியாதவர்களின் நிலையும், பாதை காட்டும் புண்ணிய புருஷரின் நிலையும் ஒரு மிகப் பெரியளவிற்கு காரணம் ஆகி விடுகின்றது என்பது துயரமான உண்மை. சத்திய வசனம் இது குறித்து என்ன சொல்லுகிறது என்பதை கவனிப்போம். எரேமியா என்ற தேவதாசர், அவர் எழுதிய புத்தகத்தில் எரேமியா 6ம் அதிகாரம், 6ம் வசனத்தில்,

"வழிகளிலேயே நின்று, பூர்வபாதைகள் எவை என்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தா (கடவுள்) சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்க மாட்டோம் என்கிறார்கள்" என்று எழுதியுள்ளார்.

இதில் சொல்லப்படும் ஆலோசனையைக் கேட்டு, விசாரித்து, பார்த்து பின் அதிலே நடக்க வேண்டும். இன்றைய அவசர உலகத்தில் இதற்கெல்லாம் அவகாசம் ஏது? என்று கேட்பவர்களும் உண்டு.

அப்படிப்பட்டவர்கள் தவறான பாதையில் வெகுதூரம் சென்று தவறு என்று தெரிந்து மீண்டும் சரியான பாதையைத் தேடி வரவேண்டும். அவசரமாக முடிவெடுத்தால் இந்த அவஸ்தையை தவிர்க்க முடியாது.

இதைப் போல ஆன்மீகப் பாதையில் தவறாகப் போய் நமது தவறான நிலையைப் புரிந்துக்கொள்வதற்கு முன்பு நமது வாழ்வு முடிந்து விடுமானால் நமது நிலை எப்படி இருக்கும்?.

எனதருமை நண்பரே, நல்ல வேளை அந்த முடிவுக்கு முன்பே அந்த சரியான வழியைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பை நீங்கள் பெற்றுள்ளீர்கள்.

இன்று உலகமெங்குமுள்ள நாட்காட்டியின் நாயகராக இருக்கும் இயேசு கிறிஸ்து கூறுகிறார், *நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரன்* (யோவான் 14:6) இங்கு *பிதா* என்று சொல்லப்பட்டுள்ளது ***கடவுள்.*** அவர் இருக்கும் இடமே பரலோகம். பைபிள் முழுவதும் எப்படி இந்த சரியான வழியைக் குறித்துப் பல தெளிவான விளக்கங்கள் இருக்கின்றன. உண்மையிலேயே *பரலோகம்* போக வேண்டும் என்ற ஆவல் உள்ளவர்கள் அந்த வழியைப் பற்றிய விளக்கத்தை சரியாகக் கேட்டு விசாரித்துப் பார்த்து அந்தப் பாதையில் நடக்க வேண்டும்.

இங்கு வழிகாட்டுகிறேம் என்றுச் சொல்லி தவறான வழிகளைக் காட்டும் சில நல்ல *மனிதர்கள்* உண்டு. அவர்கள் தங்களை *தேவ ஊழியர்கள், சகோதரர்கள், பாதிரியார்கள், பாஸ்டர்கள்,* FATHERS என்றும் கூறிக் கொள்வார்கள். இவர்களில் பெரும்பகுதியினர் தங்களுக்கே அந்த வழி எது என்று தெரியாதப் பாவப்பட்ட மனிதர்கள். பைபிள் சொல்லுகிறபடி இவர்களே பார்வையற்றவர்கள், இவர்கள் எப்படி மற்ற பார்வையற்றவர்களுக்கு வழிகாட்ட முடியும்?.

எனவே, பைபிளில் என்ன சொல்லப்பட்டுள்ளது, சரியான பாதை எது? என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுவது மிகவும் அவசியமானது.

உதாரணத்திற்கு பைபிள், ஒரே ஒரு சபை இருப்பதாகக் கூறுகிறது (எபே 4:4-6) அதை ஏற்படுத்தியவர் இயேசு கிறிஸ்து என்றும் கூறுகிறது. (மத். 16:18) ஆனால், இங்கு எல்லா சபைகளையும் ஏற்றுக் கொள்கின்றனர். இது எப்படி சாத்தியம் ஆகும்?.

பைபிள் சொல்லும் ஒரே சபை என்பது உண்மையா? அல்லது இவர்கள் நம்பும் பல சபைகள் என்பது சரியா? இது ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பது போல ஒரு உதாரணம் மட்டுமே. இன்னும் பல விஷயங்களில் இங்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் தவறான வழிகாட்டிகள் பலர் உள்ளனர். எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

ஒருவேளை, தெரியாமலேயே இந்த தவறான வழிகாட்டிகளில் நீங்களும் ஒருவராக இருக்ககூடும், அல்லது தவறான பாதையில் செல்லும் பரிதாபத்திற்குரிய நண்பராகவும் நீங்கள் இருக்கக்கூடும். பரிசோதித்துப் பாருங்கள், தவறு எங்கே என்று கண்டுபிடியுங்கள். நீங்கள் சரியான வழியில் சென்று பரலோகப் பேரின்ப வாழ்வைப் பெற வேண்டும் என்பதே எங்கள் அவா. அதை நீங்கள் பெற்றுக் கொள்ள வாழ்த்துகிறோம்.

# கிறிஸ்துவைப் பின்பற்ற நாம் எடுக்க வேண்டிய நம்முடைய சிலுவை!

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான அன்பு திருமறை வாசகர்களுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! தேவன் தாமே உங்களை ஆசீர்வதித்து சமாதானத்திற்குட்படுத்துவாராக. ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப்பின்பற்றக்கடவன் என்று மத் 16:24-ல் ஆண்டவர் ஒரு எச்சரிப்போடு நம்மை அழைக்கின்றார். ஆனால் இன்றைய கள்ள போதகர்கள் சந்தையில் சிறுவியாபாரிகள் அய்யா வாங்க அம்மா வாங்க, ஓடிவாங்க என்று அழைப்பதைப் போல வியாதிகள் நீங்கவும், கடன் தொல்லை தீர, கோர்ட்டு கேசுகள் ஜெயிக்கவும், திருமணம், வேலை போன்றவை கிடைக்கவும் இயேசுவை நாடுங்கள் என்று தெருவோர மோடி மஸ்தானை விடக் கீழ் இறங்கி, இயேசுவின் நாமத்தை கூவி விற்பதைக் காண்கிறோம். இவ்வுலகத் தேவைகளுக்காக மாத்திரம் ஒருவன் இயேசுவை அணுகினால் அவன் எல்லாரையும் விட அதாவது, துன்மார்க்கன், அவிசுவாசியை விட பரிதாபத்திற்குரியவனாகிறான். இன்றைக்கு கள்ள போதகர்கள் இப்படித்தான் இயேசுவை அறிமுகப்படுத்துகிறார்கள் அவர்கள் அதிக தண்டனை அடைவார்கள். சரியான சத்தியம் கிறிஸ்துவின் சபையார் மூலமாய், திருமறை ஆசான் போன்ற பத்திரிக்கைகள் மூலமாய் மற்றும் தொலைக்காட்சி ஊழியத்தின் மூலமாய் எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. ஒருவன் அந்த சத்தியத்தை அறிவ தன் மூலம் விடுதலை அல்லது இரட்சிப்பை அடையலாம். மாறாக, மனுஷருடைய கட்டளைகளை நம்பினால் அவர்களுடைய ஆராதனை வீணானதாயிருக்கும்.

கிறிஸ்துவைப் பின்பற்ற சிலுவை எடுப்பது கிறிஸ்துவினிமித்தம் வரும் பாடுகள், நிந்தைகள், துன்பங்கள் மற்றும் தீமையான மொழிகளை சகித்தலைக் குறிக்கிறது (மத். 5:11, 1 பேது 2:19, 1 பேதுரு 4:14,16) பொதுவாக மனிதனுடைய வாழ்க்கையே போராட்டம் நிறைந்ததாய் இருக்கிறது என்று யோபு கூறுகிறார். பூமியிலே போராட மனிதனுக்கு குறிப்பிட்ட காலம் உண்டு. யோபு 7:1. அது அவன் ஆவிக்கு வேதனையையும் ஆத்துமாவுக்கு கசப்பையும் தருகிறது (யோபு 7:11) நமது வாழ்நாளில் சஞ்சலம் தான் மிகுதியாய் உள்ளது. (யோபு 14:1) மாம்சம் இருக்கும் மட்டும் அதில் நோவும், ஆத்துமா அவனுக்குள் இருக்கு மட்டும் வேதனையும் கண்டிப்பாக இருக்கும் என்று யோபு கூறுகிறார் (14:22) ஆனால் நாம் ஆண்டவரை உண்மையாய் பின்பற்றும் போதும் எதற்காக இப்படி வேதனை? இது நம்முடைய கேள்வி மட்டுமல்ல யோபும் கேட்கிறார். என் கைகளில் கொடுமை இல்லாதிருக்கையிலும், என் ஜெபம் சுத்தமாயிருக்கையிலும், அப்படியாயிற்று (யோபு 16:17) அதே போன்று எரேமியா கேட்பதை கவனியுங்கள். ஆகாதவர்களின் (துன்மார்க்கர்) வழி வாய்க்கிறதென்ன? துரோகஞ் செய்பவர் சுகமாய் இருப்பதென்ன? எரே 12:1 இது நம் அனைவருக்கும் பொதுவாக எழும்பும் கேள்விகள் அல்லவா? அதற்கு பதிலை சங்கீதக்காரன்

ஆசாப் தருகின்றான். அவர்களுடைய முடிவு மிகவும் கோரமாக இருக்கும் என்கிறார் (சங் 73:17-20) ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் முடிவு நல்லது என்று ஞானி சாலமோன் கூறுகிறான். அதன்படி நம்முடைய முடிவான வாழ்வு நலமாய் அமையவே நாம் நம்மை வெறுத்து நமது சிலுவையை எடுத்து இயேசுவை பின்பற்றக் கடனாளிகளாயிருக்கிறோம். தேவனுடைய ராஜ்ஜியத்திற்கு நாம் தகுதியானவர்களாக மாறவே பாடுகள் நமக்கு உதவி செய்வதை நாம் புரிந்து சமாதானம் அடைய வேண்டியுள்ளது (அப். 14:22, 2தெச 1:5) அதை மீறிக் கேள்வி கேட்க துணிந்தால் - களிமண் குயவனைப் பார்த்துக் கேள்வி கேட்பதை போலிருக்கும் ரோமர் 9:20 எச்சரிக்கை!

## I. நம் மாம்சமும் சிலுவையும்

நாம் சுமக்க வேண்டிய சிலுவையில் முக்கிய பங்கு வகிப்பது நமது மாம்சமே! ஆம், அதுவே நாம் இயேசுவை பின்பற்ற முடியாமல் பண்ணுகிறது. கெத்சமெனே தோட்டத்தில் அதைத்தான் இயேசு கூறினார். ஆவி உற்சாகமுள்ளது தான், மாம்சமோ பெலவீனமுள்ளது சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபியுங்கள் (மத் 26:41) ஆக, நாம் சிலுவையை சுமக்கக்கூடாதபடிக்கு நமக்கு பெலவீனத்தை நம் சொந்த மாம்சமே உண்டாக்குகிறது. எனவே தான் நமக்கு செம்மையாய் தோன்றுகின்ற வழிகள் ஆன்மீக மரணத்திற்கு காரணமாகிறது. ஆகவே நம்முடைய சுயபுத்தியின் மேல் சாயாமல் கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து தீமையை விட்டு விலகி, மாம்ச இச்சையின்படி நடவாமலிருக்க வேண்டும். நம்முடைய மாம்சமும், மனசும் விரும்பியவைகளை நாம் செய்யக்கூடாது என்று தேவனுடைய வார்த்தை நம்மை எச்சரிக்கின்றது எபே 2:3. இருப்பினும் அதன்படி நாம் வாழ முயற்சிக்கும் போது மாம்சம் நம்மை நன்மை செய்ய விடாமல் தடை செய்வதில்லை உறுதியாய் இருப்பதாக பவுல் வருத்தப்படுகிறார் (ரோமர் 7:18-23) ஆனால், இதை சாக்காக வைத்து ஒருவன் பாவம் செய்யக்கூடாது. ஏனெனில், அப்படி மாம்சத்தின்படி நடந்தால் நியாயத்தீர்ப்பில் தண்டனையும் தேவனை விட்டுப் பிரியும் ஆபத்தும் இருப்பதை நாம் மறந்து விடக்கூடாது (ரோமர் 8:1,6) ஆகவே, நாம் உலக மேன்மையை வெறுத்து தேவனுக்கு ஆகாத பின்னான காரியங்களை மறந்து, பரலோக வாழ்க்கைக்கு உகந்த முன்னானவைகளை நாடி சபை கூடிவருதலை விட்டு விடாமல் நம்முடைய பந்தயப் பொருளை அடைய இலக்கை நோக்கி தொடர வேண்டும். நாம் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம் (1தெச 4:3-6) ஆனால், நம் மாம்ச இச்சைகள் நமது ஆத்மாவுக்கு விரோதமாக போர் செய்கிறது 1பேது 2:11,12 அதனால் தான் நல்லவர்கள் என்று பெயரெடுக்கும் அநேகர் தவறி விழுகிறதற்கு அது காரண மாகிறது. ஆனால், நம்முடையக் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து மூலம் தேவன் நமக்கு ஜெயங்கொடுக்கின்றார். எனவே, நாம் உள்ளான மனுஷனில் பலப்பட நமக்கு உதவியாக கொடுத்திருக்கும் பரிசுத்த ஆவியானவர் துணையுடன் தேவனிடம் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் ஜெபித்து ஜெயங்கொள்ளுவோமாக.

## II. நம் சிலுவையும் மற்ற மனுஷரும்

நாம் இயேசுவை பின்பற்றாதபடிக்கு தடை செய்யும் மனுஷர்களைப் பற்றி வேதம் எச்சரிப்பதை கவனியுங்கள். பூமியின் மேல் பிரிவினை உண்டாக்க வந்தேன் ஒரு மனுஷனுக்கு சத்துருக்கள் அவன்

வீட்டாரே (மத் 10:34-39) என்று இயேசு சொல்கிறார். வீட்டில் எப்படி சத்துருக்கள் இருக்கிறார்கள்? கிறிஸ்துவுக்குக் கீழ்படியும் நம் ஆவலை தடை செய்யும் அனைவருமே ஆவிக்குரிய வளர்ச்சியை தடை செய்யும் சத்துருக்கள் தான். குடும்பத்தில் நாம் அதிக பாசம் அதாவது, கிறிஸ்துவுக்கு கீழ்படிவதை விட அதிக பாசம் காண்பிக்கும் போது நாம் ஆண்டவருக்கு பிரியமாக நடந்து கொள்ள முடியாது. ஒருவன தன் மனைவி அல்லது பிள்ளைகளிடம் அன்பு கூருவதினால் சபை கூடுதலை விட்டு விட்டால் அது பாவமில்லையா? தேவனை அசட்டை பண்ணுகிறான் அல்லவா? இன்னும் அவிசுவாசக் குடும்பத்திலிருந்து நாம் இரட்சிக்கப்பட்டிருந்தால் நாம் அதிக தொல்லைகளை கடந்து வர வேண்டியுள்ளது. எப்படியிருப்பினும் தேவனைத் தவிர நாம் வேறு அந்நிய தேவர்களை நாடாமல் பக்தி வைராக்கியமாக நடக்க வேண்டியுள்ளது. மேலும் சில வேளைகளில் நம்மை மதிக்க வேண்டிய மனுஷர்கள் நமக்கு விரோதமாக நடக்கும் போது நாம் கிறிஸ்துவினிமித்தம் சகிக்க வேண்டியுள்ளது. மேட்டிமையுள்ள மனுஷரால் வரும் அவமானத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

கிறிஸ்துவைப் பின்பற்ற தடை செய்யும் மனுஷரில் உலக சிநேகிதம் முக்கிய பங்கை வகிக்கின்றது. அவர்களுடைய அநேக விசேஷக் காரியங்களை ஞாயிறு ஆராதனை நேரத்தில் வைத்து விட்டு நம்மை உரிமையோடு அழைப்பார்கள். பிரியமானவர்களே, நாம் அதற்கு இடங்கொடாமல் தேவனுக்கு முதலிடம் கொடுத்து நம் உறுதி தன்மையை எப்படியாவது அவர்களுக்கு தெரியப்படுத்தி விட வேண்டும். மாறாக சிநேகிதன் கோபித்துக் கொள்ளுவான் தேவன் பொறுத்துக் கொள்வார் போன்ற அசட்டுத் தத்துவங்களைக் கூறக் கூடாது. நம்முடைய தேவன் இந்த விஷயத்தில் பட்சிக்கிற அக்கினியாயும், எரிச்சலுள்ளவராகவும், தண்டிக்கக் கூடியவராகவும் இருக்கின் றார் என்பதை அறிந்து கொள்ளுங்கள் மத் 22:3,7; லூக் 14:18 எனவே தான், யாக்கோபு உலக சிநேகிதம் தேவனுக்கு விரோதமான பகை என்கிறார் (யாக் 4:4) உலக சிநேகிதம் பொழுதுபோக்கு, கேளிக்கை, ஜாலி என்பது போல இருப்பினும் அது நம்மை பொல்லாத வழிக்கே அழைத்துச் செல்லும் (நீதி 1:15) அதிலும், விபச்சாரம் ஒருவன் தேவனை விட்டு அழிவுக்குட்படுத்துகிறது (நீதி 5:5,6, 6:32) பல நேரங்களில் ஆண்கள், பெண்களின் புத்திசாலித்தனத்தில் மயங்கி விபசாரத்தில் ஈடுபடுவதுண்டு. எனவே, தான் சாலமோன் ஞானத்தை சகோதரி என்று சொல்வாயாக (நீதி 7:4,5) என்று நல்ல ஆலோசனை சொல்கிறார் பெண்களின் புற அழகு வஞ்சனையும் வீணானதுமாய் இருப்பதையும் வேதம் எச்சரிக்கின்றது. சில நேரங்களில் சபைக்குள் இருக்கும் விசுவாசிகளைக் காட்டிலும் வெளியே இருக்கும் சிநேகிதர்கள் நம்மிடம் அதிகம் அன்பு காட்டி கொஞ்சுவதை போல் இருப்பினும் நாம் அதில் மயங்கக் கூடாது என்று சாலமோன் கூறுகிறார். நீதி 1:10 குடும்பங்களில் கீழ்ப்படியாத மனைவி, பிள்ளைகள் மூலம் போராட்டம் வரலாம் சகோதரிகளுக்கு அன்பில்லாத கணவர் மூலமாக வரலாம். உலக சிநேகிதம் பல வேளைகளில் போதைப் பழக்கம், சூதாட்டம் இவைகளில் சிக்க வைத்துவிடும் என்பதை மறந்து விடக்கூடாது. முக்கியமாக இரட்சிக்கப்படாதவர்களோடு அல்லது சத்தியத்திற்கு கீழ்ப்படியாதவர்களோடு நாம் கலவாதிருக்க வேண்டும். (1 தீமோ 6:3-5, 3 யோவான் 9,10 வசனம்).

**சகோ. K. பாண்டியன்**
பாண்டிச்சேரி.

(வளரும்)

# BIBLE MEDITATION


## TV PROGRAM

## TAMILAN TV

*Every Saturday*
*Time. 7:15 - 7:30 am.*

*Every Sunday*
*Time. 9:30 - 9:45 pm.*

*Every Monday*
*Time . 6:30 - 6:45 am.*



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

திருமறை ஆசான்
இதழ் ஆசிரியரின்
திருமறை தியானம்
தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |
| தமிழன் TV | ஞாயிறு | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | திங்கள் | காலை | 6:30 | மணி |

Regd. News Paper RNI No. 47661/87
Postal Regn. No. Erode/ 26 /2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month

வேதாகம
அஞ்சல் வழிக் கல்வியில்
ஒரு புதிய அத்தியாயம்

**Advanced Bible Correspondence Course**

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

**ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.**

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

**Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.**
**Editor. S. Rajanayagam.**